Regd.No M. 4593. "KUDI ARASU" 16 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

மாலை 17 } ஈரோடு, 7-10-1944 புரட்டாசி-மீ 22உ { மலர் 52

## தீபாவளிப் பண்டிகை

(சித்திரபுத்திரன்)

வருகுதப்பா தீபாவளி வளமை போல், நீ என்ன செய்யப்போகிறாய்?

தம்பி! பழயகால சாஸ்திரம் இன்றைக்கு உதவாது. இன்றைக்கு ஏற்றபடி அது மாறவும் மாறாது. அதை ஒருத்தன் எடுத்து வைத்தால்தான் அல்லது அது அசைக்கப்பட்டால்தான் ஒரு இடத்தில் இருந்து ஒரு இடத்திற்கு மாறும். அல்லது அதை ஒருவன் எடுத்து தனக்குவேண்டாததை அடித்து வேண்டியதை எழுதினால்தான் திருந்தும்.

ஏன் அப்படிச் சொல்லுகிறேன்? அதற்கு உயிரில்லை. அது ஏடு, காகிதம்போன்ற அசேதன வஸ்து, சிந்திக்கும் தன்மை அற்றது.

"ஆகவே சாஸ்திரம் சொல்லுகிறது, அந்தப்படி செய்கிறேன்" என்று நீ சொல்லுவாயானால் நீ சேதன (சிந்திக்கும் சக்தி உள்ள) வஸ்து ஆகிய மனிதனென்றோ, அறிவுள்ளவன் என்றோ சொல்லிக்கொள்ள உனக்கு சிறிதுகூட யோக்கியதை கிடையாது.

"சாஸ்திரம் பெரியவாள் எழுதினது" என்று சொல்லுவாயானால் நீயாரு சிறியவனா? எந்தப் பெரியவாள்? அந்தப்'பெரியவாள்' காலத்தைவிட முட்டாள்தனமான காட்டுமிராண்டித்தனமான காலத்திலா நீ பிறந்தாய்? போக்குவரத்து சாதனமில்லாத, விஷயஞானம் பெற வாய்ப்பும் சாதனமும் இல்லாத, கல்லாயுதகாலத்திலா இருந்து வாழ்ந்து வருகிறாய்! ஆகவே அந்தக் காலத்தைவிட அந்தக்காலத்து பெரியாரைவிட நீ எந்த விதத்திலும் தாழ்ந்தவனாக இருக்கமுடியாது. ஆனால் சாஸ்திரம், பெரியவாள், வெகுகாலத்திற்கு முன் ஏற்பட்டது என்கின்ற முட்டாள் தனத்துக்குத் தாயகமாக இருக்கும் பித்தலாட்டத்தில் இருந்து முதலாவதாக நீ வெளியில் வா!

"சாஸ்திரத்தைப் பற்றிக் கவலை இல்லை, பெரியவாளைப் பற்றிக் கவலை இல்லை, ஆனால் அந்த சாஸ்திரங்கள் கடவுள்களால் சொல்லப்பட்டது; உண்டாக்கப்பட்டது" என்று சொல்லுகிறாயே? அப்படியானால் இப்படிச் சொல்லுகிறவனைப் போல் முட்டாள் மனித வர்க்கத்தில் ஒருவருமே இருக்கமுடியாது என்பதோடு இதைக் கேட்டு தப்பி நடக்க ஆரம்பிக்கிறானே அவனைப் போல் அடிமடையனும் வேறு இருக்கமுடியாது என்று சொல்லுவதற்கு தம்பி நீ மன்னிக்க வேண்டும்.

கடவுள் இருக்கிறார் என்று வைத்துக்கொள், கடவுள் சொன்னார்என்று வைத்துக்கொள். யாருக்குச்சொன்னார்? உனக்கா சொன்னார்? மனிதனுக்குச் சொன்னார் என்பாய். அப்படியானால், கிறிஸ்தவருக்குச் சொன்னாரா? முஸ்லிமுக்குச் சொன்னாரா? பார்சிகளுக்குச்சொன்னாரா? அவற்றை நம்பாத 'நாஸ்திகனுக்குச்' சொன்னாரா? யாருக்குச் சொன்னார்? எப்பொழுது சொன்னார்? அந்தக் காலத்தில் நீ இருந்தாயா? நீ பார்த்தாயா? அல்லது யார் பார்த்தது? "கடவுள் சொன்னார்" என்று இன்று உனக்குச் சொன்னவர்கள் யார்? சொன்னவர்களுக்குச் சொன்னவர்கள் யார்? சாஸ்திரம் கடவுளால் சொல்லப்பட்டது என்பதை சாஸ்திரமே சொன்னால் போதுமா? அதற்கு அடையாளமே வேண்டாமா? அச்சுப்புத்தகமும் அய்யர் பேச்சும், கிருபானந்தவாரி, பண்டிதமணிகள் பிரசங்கங்களுமே போதுமா? இவைகளையெல்லாம் யோசித்த பிறகல்லவா "சாஸ்திரம் சொல்லுகிறது" என்பதையும், சாஸ்திரத்தை கடவுள் சொன்னார் என்பதையும் நீ மனிதனாய் இருந்தால் நம்பவேண்டும். மாடாயிருந்தால் அல்லவா யோசியாமல் ஆம் என்று தலையாட்ட வேண்டும்? இந்த இருபதாவது நூற்றாண்டில் உனக்கு இதுகூடவா தம்பி தெரியவில்லை?

சாஸ்திர காலத்தைவிட இன்று கடவுள்கள் அருமை என்று நினைக்கிறாயா? எண்ணிமுடியாத கடவுள்கள் தோன்றி இருப்பதோடு தோன்றியவண்ணம் தானே இருக்கின்றன. "கடவுள்களுடைய அற்புதங்கள்" இக்காலத்தில் நடக்காதகாரணம் ஏது? மனிதர்களிடத்தில் கடவுள்கள் பேசாத காரணம் ஏது? பெசண்டம்மை இடம் பேசினார், காந்தியாரிடம் பேசுகிறார்.

அசரீரியும் சோதனைகளும் நடக்காத நாள் ஏது? இப்படி எல்லாம் இருக்கும் போது இக்காலத்தில் கடவுள் நேரில் வந்து உன்னையோ அல்லது என்னையோ கூப்பிட்டு நேரில் "அடே மக்களா நான்தாண்டா சாஸ்திரம் சொன்னேன் சந்தேகப்படாதீர்கள்" என்று சொல்லித் தொலைத்தால் பிறகு உலகில் ஏதாவது கலவரம் இருக்க முடியுமா?

அல்லது ரமணரிஷிகள் என்ன, சாயிபாபாக்கள் என்ன, மகாத்மாக்கள் என்ன மற்றும் தெய்விக சக்தி பெற்றவர்கள் என்று சொல்லப்படும் மகான்கள் என்ன இத்தனை பேர்களில் யாரிட-

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)

## கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச் சாலையின் 15-வது ஆண்டுவிழா

கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச் சாலையின் 15-வது ஆண்டு நிறைவு விழா, 15-9-44 வெள்ளியன்று காலை 10-மணிக்கு கோட்டாறு சமாச வீதியில் அமைத்துள்ள திரவியம் பந்தலில், நெல்லைஜில்லா திராவிடக் கழகத் தலைவர் தோழர் எ. வி. முத்தையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

விழாவிற்காக காஞ்சி "திராவிட நாடு" ஆசிரியர் தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்களும், பூவாளூர் அ. பொன்னம்பலனார் அவர்களும் வந்திருந்தார்கள். நாகர் கோவிலில் சி. என். அண்ணாதுரை அவர்களையும், பொன்னம்பலனாரையும், தலைவர் முத்தையாவையும், காஞ்சி திராவிட கழக நிறுவாகிகளான தோழர் சீலநாராயணன், வேலப்பன், பெருமாள் முதலியோர் மலர்மாலை சூட்டி வரவேற்றார்கள். காலை சரியாக 10-மணிக்கு விழா ஆரம்பமானது. தோழர் கணபதி அவர்கள் தமிழ் பாட்டுக்கள் பாடினார். தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் உருவப்படத்தை திறந்து வைத்து சுமார் 2-மணி நேரம்வரையில் சுயமரியாதை இயக்கம் ஏன் வந்தது, எதற்காக வந்தது என்பதுபற்றி விளக்கி பேசினார்கள். பொன்னம்பலனார் அவர்கள், பெரியார் சேவை என்பதைப்பற்றி 1-30 மணிவரை பேசினார்கள். சாப்பாட்டுக்காக காலை கூட்டம் பிரிந்து, மாலை 5மணிக்கு மீண்டும் விழா ஆரம்பமானபோது, காலை நிகழ்ச்சியைவிட கூடுதல் மூன்றுபங்கு மக்கள் அதிகமாக கூடி இருந்தார்கள். சுருக்கச்சொல்வதானால், நாகர் கோவில் நகரமே திரண்டு வந்தன என்று கூறலாம். "கலையும் வாழ்வும்" என்பதுபற்றி தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களும், "சமுதாய வளர்ச்சியும், சமய உணர்ச்சியும்" என்பதுபற்றி தோழர் பொன்னம்பலனார் அவர்களும், "தமிழர் நாகரீகம்" என்பதுபற்றி எல். வன்னியப்பெருமாள் அவர்களும் பேசினார்கள். கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச்சாலையின் சார்பில் திராவிடநாடு பத்திரிகை வளர்ச்சிக்கு ரூ. 500-ம், பட்டாரியர் நெசவு தொழிலாளர் சங்க சார்பில் ரூ. 100-ம் நன்கொடையாக கூட்டத்தில் கொடுக்கப்பட்டு, திராவிடர் கழகத்தின் சார்பில் அண்ணாதுரைக்கு ஒரு வரவேற்புத்தாள் வாசிக்கப்பட்டும், வாசிப்புச்சாலையின் வளர்ச்சிக்காக அண்ணாதுரை அவர்களால், ரூ. 100 வாசிப்புச்சாலைக்கு கொடுக்கப்பட்டும், நன்றி கூறப்பட்டும், விழா சரியாக இரவு 11-30-க்கு முடிவுற்றது என தோழர் கே. இராமையா எழுதுகிறார்.

## வடசேரியில் ஆண்டு விழா!

நாகர்கோவிலுக்கு ஒரு மைலில் தூரமுள்ள வடசேரியில், நெசவு தொழிலாளர் சங்கத்தின் 6-வது ஆண்டு நிறைவு விழா, 16-9-44 மாலை 6 மணிக்கு வஞ்சாதித்தன் புதுத் தெருவில் அமைக்கப்பட்ட பந்தலில் வைத்து, தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. 4000 ஜனங்கள் வரை கூடி இருந்தார்கள். கோட்டாறு தோழர் கே. இராமையா அவர்கள், 'பண்பழித்தல்' என்பது பற்றியும், பொன்னம்பலனார் அவர்கள் 'தொழிலாளர் முன்னேற்றம்' என்பது பற்றியும், குண ஸ்ரீதரன் அவர்கள் 'தொழிலாளரும் கல்வியும்' என்ற பொருள் பற்றியும், சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். சங்க நிறுவாகி தோழர் ஆறுமுகம் அவர்கள் பிரசங்கியாளரையும் தலைவர்களையும் வரவேற்று, மலர் மாலை சூட்டி, தேநீர் விருந்தளித்தனர். வடசேரி ஆண்டு விழாவில் தோழர் எஸ். பகவதி அவர்கள் எடுத்துக்கொண்ட இன்ன உழைப்பும் முயற்சியுமே விழா சிறப்புக்குரிய முதல் காரணமாகும்.

## திருநெல்வேலி ஜில்லா சுயமரியாதை இயக்கத் தோழர்களுக்கு வேண்டுகோள்

அன்புடையீர்!

அண்மையில் சேலம் மகாநாட்டில் தீர்மானித்தபடி நமது ஜில்லா பூராவிலும் திராவிடர் கழகங்கள் தோற்றுவித்து அங்கத்தினர்கள் பெருவாரியாக சேர்த்து மண்டலத் தலைவர் பாண்டியன் அவர்களுக்கு ஆதரவு தரவேண்டியது நமது கடமையாகும். ஆதலால் ஆங்காங்கு கழகங்கள் தோற்றுவிக்கப்படாத கிராமங்களில் உடனே கழகங்கள் நிறுவி அதன் விபரம் 'குடி அரசு'க்கும் ஆத்துக்குடியில் உள்ள ஜில்லா தலைமை ஸ்தாபனத்துக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

டி. தங்கையா ஆனரரி காரியதரிசி,
நெல்லை ஜில்லா திராவிடர் கழகம்,
ஆத்துக்குடி.

## ஆத்துக்குடி சென்னை மாகாண இல்லத்தார் சங்கம்

சென்னை மாகாண இல்லத்தார் 9வது மாநாடு, மாதர் 7-வது மாநாடு, ஆத்துக்குடி வாலிபர் சங்க 8-வது ஆண்டு விழா வைபவங்கள் 21,22-10-44-ல் ஆத்துக்குடி பார்வதியம்மன் கோவில் தெருவில் நடைபெறும்.

## வருணாச்சிரம மாநாடா?

(வில்லாளன்- தில்லை)

நாலு வருணச் சாதியா நம் தமிழ்நாட்டிலே என்று நாம் சாடும் வேளையிலே பறையனுக்கும் பார்ப்பனனுக்கும் வேற்றுமை யென்ன?, என்று நாம் வினா விடுக்கும் காலையிலே கூடுகின்றனராம் தில்லையிலே பிரமன் முகத்துப்பிறந்த பூணூலுறவுக் கூட்டத்தினர்! வேதியர் குழாமே, நன்று! நன்று!! உங்கள் செயல். கங்கைக்கரையிலே கச்சங்கட்டிய கோலத்துடன் கண்மூடி உருவேற்றும் காட்சியளிக்கும் காலமல்ல! பஞ்சமனைக் கண்டால் படுபாதகம், பேச்சைக்கேட்டால் பெருங்கேடு என்று கூறிடும் மனுவினாட்சியல்ல! பார்ப்பான் வீட்டுப் பிள்ளை இறக்க பஞ்சமனியற்றிய தவமென்று தலை துணிந்திடும் இராமனாட்சியல்ல! பறையனா, பார்த்துப்போ, பாதையிலே வந்தால் காதத்தூரத்திலே அறிவித்திடு என்று கட்டளை விதித்திடும் விக்ரமாதித்யன் ஆட்சியல்ல! ஐயரென்றவுடன் அடிபணியும் ஆரிய அடிவருடிகளின் ஆக்கிரமிப்புமல்ல! வேதியரே, இது வேவல் ஆட்சி; ஆரியரே, படித்தவன் பறையனாயினும் பட்டமுண்டு, பதவியுண்டு என்னும் ஆங்கில ஆட்சி என்பதை அறிவினில் வையுங்கள்!

தன்னுணர்வுத் தோழர்களே! திரண்டு வாரீர் தில்லைக்கு! பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும் என்பது எங்கள் நீதி என்பதை நிலைநாட்ட! வேற்றுமை வளர்த்திடும் வீணர் பெற்றுவரையாம் வருணாச்சிரமத்தை வெட்டிப் புதைத்திட! நான்கு பிரிவினை நமக்கு வேண்டாம் என்னும் வெறுப்பை நாம் காட்டிட! ஓர் கூட்டம் கூட்டிட! ஓடி வாரீர், ஒன்றுசேர்ந்து உழைத்து ஒழிப்போம் வருணப்பிரிவை! 10-7-44ல் நடக்க விருக்கிறது வருணாச்சிரம மாநாடு என்பதை மனதில்வைத்து வாரீர் தோழரே!

வீழ்க சூழ்ச்சிகள்!
ஒழிக வருணாச்சிரமம்!!
வாழ்க திராவிடர்!!!

## இறுதிக்கடன்

திருச்சி மாவட்டம் லால்குடி தாலூகா மணக்கால் கிராமம் திராவிட கழக உபதலைவர் ம. இ. சோமசுந்தரம் அவர்களின் தாயார் சின்னம்மாள் 6-9-44-ல் இயற்கையெய்தியதை முன்னிட்டு 19-9-44-ல் இறுதிக்கடன் நடைபெற்றது. தோழர்கள் பண்டித நடேச முதலியார், எல். எஸ். ஆறுமுகம், நம்மாழ்வார் முதலியவர்கள் நீத்தார் கடனும், தமிழர் கடமையும் என்னும் பொருள் பற்றியும், தாயாரின் அருங்குணங்கள் பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

# திராவிடர் கழகங்கள்

நாகை: 10-9-44-ல் வெளிப்பாளையம் அவுரித்திடலில் தோழர் டி. பி. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சேலம் மாநாட்டுத் தீர்மானங்களைப் பற்றி விளக்கிப் பேசினார்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் மற்றும் பல தோழர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

இதுவரையில் தெ. இ. ந. உ. சங்கம் என்று இருந்ததை திராவிடர் கழகம் என பெயர் மாற்றி அமைக்கவேண்டும் என்று தோழர் எஸ். வி. கிருஷ்ணனால் கொண்டுவரப்பட்டு எல்லோராலும் ஏகமனதுடன் ஒப்புக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது. கூட்டம் 9-30 மணிக்கு இனிது முடிந்தது.

அன்று இரவு 10-30 மணிக்கு நாகை ராபின்சன் ஹாலில் பெரியார் தலைமையில் நாகை திராவிட நடிகர் கழகத்தாரால் போர்வாள் என்னும் நாடகம் வெகு சிறப்பாக நடத்தப்பட்டது. இதன் நன்கொடையும், வசூலும் பின்னால் அறிவிக்கப்படும்.

• •

கோபி: தெ.இ.ந.உ. சங்கத்தின் பெயரை 19-9-44ல் சேலம் மாநாட்டுத்தீர்மானப்படி திராவிடர் கழகம் என மாற்றப்பட்டதாக கழக செயலாளர் அறிவிக்கிறார்.

• •

பட்டுக்கோட்டை: 15-8-44ந் தேதி வெள்ளிக்கிழமை இரவு 10-மணிக்கு தோழர் கே.எஸ். சிவராமகிருஷ்ணன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற தெ. இ. ந. உ. சங்க (ஜஸ்டிஸ்கட்சி)கமிட்டி கூட்டத்தில் ஜஸ்டிஸ் பார்ட்டி என்கின்ற திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றுவதென சேலம் 16-வது மாகாண மாநாட்டுத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு இக்கமிட்டியும் இனி திராவிடர் கழகம் என்ற பெயரால் வேலைசெய்வது என்றும், சேலம் மாநாட்டின் எல்லா தீர்மானங்களையும் முழுமனதுடன் இக்கமிட்டி அங்கீகரிப்பதாகவும், புதிதாக அங்கத்தினர்கள் சேர்த்து நல்ல அமைப்புடனும், கட்டுத்திட்டத்துடனும் வேலை செய்வதென்றும், அங்கத்தினர் ரசீது புத்தகங்களை தலைவர் பெரியாரிடம் இருந்து வரவழைக்க இக்கமிட்டித்தலைவர் கே. எஸ். சிவராமகிருஷ்ணனுக்கு அனுமதி கொடுத்தும் சேலத்தில் நடைபெற்ற 16-வது மாகாண மாநாட்டின் வரவேற்புக் கழகத்தார், தன் வரவு செலவு கணக்கு ரிப்போர்ட்டை இதுவரை வெளியிடாததை கண்டிப்பதோடு, உடனே காலதாமதமன்னியில், வரவு செலவு கணக்கையும், மீதமுள்ள பணத்தையும் கட்சித் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. விடம் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

• •

திருக்கழுக்குன்றம்: 3-9-44-ல் தெ. இ. ந. உ. கழகத்தை திராவிடர் கழகமாக சேலம் மாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க மாற்றி தோழர்கள் கி. அ. எல்லப்ப முதலியார், க. சி. துரைசுவாமி, கி. அ. அமீத் முதலியவர்களை முறையே தலைவராகவும், காரியதரிசியாகவும், பொருளாளராகவும், தோழர்கள் சா. பாலசுப்பிரமணியம், ஏ. எஸ். சுப்பிரமணியம், ர. கோவிந்தராஜு, என். தட்சணாமூர்த்தி இவர்களை நிர்வாக அங்கத்தினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இற்க, வருகிற மாதத்தில் தலைவர்களை வரவழைத்து; சேலம் மாநாட்டு தீர்மானங்களைக் குறித்து ஒரு பெரிய பொதுக் கூட்டம் நடத்தவும், குறைந்த பட்சம் 100 அங்கத்தினர்களையாவது சேர்க்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

• •

கோபி: தெ.இ.ந.உ. சங்கக்கூட்டம் 10ந் தேதி (இம்மாதம்) மாலை 9 மணிக்கு தோழர் சேதுராம் அவர்கள் இல்லத்தில் தோழர் ஜி. பி. ரங்கசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சேலம் மாநாட்டில் முதலாவது தீர்மானத்தை ஒட்டி இவ்வூர் தெ. இ. ந. உ. சங்கத்தைக் கலைத்து 'திராவிடர் கழகம்' உருவப்பெற்றது. சட்டப்பூர்வமாக நடைபெற்ற சேலம் மாநாட்டைக் குறைகூறும் தோழர்கள் போக்கைக்கண்டுவருந்துவதாகவும், கழகத்திற்குத் தோழர் ஜி. ஏ. அங்கப்பன் அவர்களைத் தலைவராகவும், மாரண்ண கவுண்டர் அவர்களைத் உபதலைவராகவும், தோழர்கள் ஜி. ஈ. கன்னியப்பன், ஏ. சி. ராம் ஆகியவர்களைத் செயலாளராகவும், ஜி. பி. ரங்கசாமி அவர்களைப் பொருளாளராகவும், சதாசிவம், ஜி. என். ராஜு முதலிய ஐந்து நபர்களை நிர்வாக அங்கத்தினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

• •

திருவளர் சோலை: 16-9-44-ந் தேதி தோழர் செ. முத்துகுமாரசாமி அவர்கள் தலைமையில் [illegible] கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் சேலம் மாநாட்டின் தீர்மானங்களைப் பற்றியும் இனி நாம் செய்யவேண்டியது என்ன? என்பதைப் பற்றியும், தலைவரும், தோழர்கள் அருணாசல நாயகர், கோ. ரங்கராஜு முதலியோர் பேசினர். கழகத்திற்கு அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டனர்.

• •

பொன்மலை: 8-9-44-ந் தேதி அங்கத்தினர்கள் பொதுக் கூட்டம் தோழர் எஸ். நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் சேலம் மாநாடும் நமது கடமையும் என்பது பற்றி பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

27-8-44ல் சேலத்தில் நடைபெற்ற 16-வது தெ. இ. ந. சங்க மாநாட்டு தீர்மானங்களையும், தலைவர் பெரியார் அவர்களையும் இக்கூட்டம் ஆதரிக்கிறது என்றும் பல்லாயிரக்கணக்கான பிரதிநிதிகள் கூடி தீர்மானித்த தீர்மானத்திற்கு விரோதமாக சில சுயநலமிகள் செய்யும் தப்புப் பிரசாரத்தை இக்கூட்டம் வன்மையாய் கண்டிப்பதுடன்; அன்னவர்களை கட்சியிலிருந்து நீக்கத் தக்க நடவடிக்கை எடுக்கவேணுமாய் பெரியார் அவர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது என்றும், இவ்வாண்டு அதிக அங்கத்தினர்கள் சேர்த்துக் கொடுப்பவர்களுக்கு முறையே மூன்று பரிசுகள் கொடுப்பது என்றும் நமது கழக பொக்கிஷதார் ஆர். பழனியாண்டியின் தகப்பனாரும், நமது இயக்க சுயமரியாதைத் தொண்டர் ஆர். நடராஜனின் தகப்பனாருமாகிய ரெங்கசாமி இயற்கை

எப்பியதற்கு இக்கூட்டம் வருந்துவதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* *

திருப்பத்தூர் (வ. ஆ.): 27-8-44 சேலம் மாநாட்டில் தீர்மானித்தபடி 10-9-44-ந் தேதி மாலை கச்சேரித் தெரு பாடசாலையில் ஒரு கூட்டம் முனிசிபல் சேர்மன் தோழர் வி. எஸ். வீரபத்திர முதலியார் அவர்கள் தலைமையில் கூடியது. அதுசமயம் கீழ்வரும் தோழர்களை மேற்படி கழகத்திற்கு நிர்வாக அங்கத்தினர்களாக தேர்ந்தெடுத்து வித்வான் வெங்கடாசலம் அவர்களால் நன்றி கூற கூட்டம் 7 மணிக்கு முடிவுற்றது.

தலைவர்: தோழர் வி. எஸ். வீரபத்திர முதலியார், துணைத் தலைவர்: தோழர் எம். நடேச பிள்ளை, செயலாளர்: தோழர் பி. வ. பெரியசாமி கவுண்டர், கூட்டுக் காரியதரிசியும், பொருளாளரும்: தோழர் வி. எம். ராஜமாணிக்கம், நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள்: தோழர் சி. கே. எஸ். மணி கௌன்சிலர், ஆர். குப்புசாமி முதலியார் கௌன்சிலர், வ. பெரியசாமி கவுண்டர், டி. என். வேணுகோபால், கே. ஜெயராமன், என். ஆர். சாமராஜா, டி. எஸ். பழனி ஆச்சாரி.

* *

சலகண்டபுரம்: 10-9-44 இவ்வூர் தெ. இ. ச. உ. சங்கப்பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. உணர்ச்சிமிகுந்த இளைஞர்கள் குழுமியிருந்தனர். தோழர் மு. காசிதனக்கோடி தலைமை வகித்தார். அப்பொழுது, சேலத்தில் 27-8-44ல் நடைபெற்ற 16-வது தெ. இ. ச. உ. சங்க மாநாட்டின் முடிவுகளை யெல்லாம் இச்சங்கம் பூரணமாக ஆதரிக்கிறது என்றும், மேற்படி மாநாட்டின் முடிவுகளுக்கேற்ப இன்றுமுதல் இச்சங்கத்தை திராவிடர் கழகம் என மாற்றியமைக்கிறதென்றும், ஏராளமான அங்கத்தினர்களைச் சேர்ப்பதென்றும், தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

பின்னர் கழகத்திற்கு தோழர் ப. கண்ணன் தலைவராகவும், தோழர்கள் மு. காசிதனக்கோடி, அ. மு. அண்ணாமலை துணைத் தலைவர்களாகவும், தோழர்கள் வீரபாலன், த. முருகன் செயலாளர்களாகவும் மற்றும் 5 தோழர்கள் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தீர்மானங்களை ஆதரித்தும், பெரியார் ராமசாமி அவர்களைப் பின்பற்றிச்செய்யவேண்டிய முன்னணிவேலைகளைப்பற்றியும், திராவிடநாடு பிரிவினைபற்றியும் தோழர்கள் கண்ணன், பாலன், முருகன் விரிவுரையாற்றினர். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது

* *

கரூர்: 16-9-44-ல் திராவிடர் கழகத்தினர் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் இக்கழகத்திற்கு வேண்டிய கமிட்டி அங்கத்தினர் தெரிந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: பி. கெ. அய்யா, உபதலைவர்: வி. கெ. புலிகேசி, செயலாளர்: டி. தமிழரசு, உபசெயலாளர்: கெ. லெனின், பொருளாளர்: சி. கோவிந்தராசன். காரியக் கமிட்டி உள்ளூர் அங்கத்தனர்கள் 12 பேரும், வெளியூர் அங்கத்தினர்கள் 12 பேரும், தெரிந்தெடுக்கப்பட்டனர். இவைகளுக்குப் பின் கூட்டம் தலைவர் பின்னுரையுடன் இனிது முடிந்தது.

* *

எட்டயபுரம்: 15-9-44-ல் தோழர் பெருமாள், திராவிடர் கழகத்தைத் திறந்து வைத்து, அதன் அவசியத்தைப் பற்றிப் பேசினார். தோழர் சு. அருணகிரி கூட்டத்திற்கு தலைமை வகித்தார். தோழர்கள் கே. பி. எஸ். நாராயணன், எம். ஆதியப்பன், எஸ். சண்முகசுந்தரம் முதலியோர் பேசினார்கள். 'திராவிடநாடு' 'குடி அரசு' பத்திரிகைகளை ஒவ்வொரு தோழரும் கண்டிப்பாக படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு சுந்தரம் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

* *

நீலகிரி: 14-6-44-ல் உதகமண்டலத்தில் வழக்கறிஞர் கிருஷ்ணசாமி முதலியார் தலைமையில் நீலகிரி ஜில்லா திராவிடர் கழகம் அமைக்கப்பட்டது. தோழர்கள் எம். கிருஷ்ணசாமி முதலியார் தலைவராகவும், கே. துரைசாமி நாயுடு உபதலைவராகவும், பண்டிட் ஜெயமணி காரியதரிசியாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

தோழர்கள் பாளயங்கோட்டை இபுராகிம், ஈரோடு சி. ஆர். நாயுடு, மேட்டுப்பாளையம் ராஜா, தங்கவேலு, உதகை சோலூர் கே. நஞ்சன் முதலியவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

இயக்கத்திற்கு 5 லட்ச ரூபாய்க்குக் குறையாமல் நிதி திரட்ட வேண்டுமென்றும், திராவிட நாடு ஏன்?, என்று விஞ்ஞான ரீதியாக ஒரு புத்தகம் எழுதவேண்டும் என்றும் அதில் திராவிட நாட்டு எல்லை, விளைபொருள்கள், ஏற்றுமதி, இறக்குமதி பொருள்கள், பாதுகாப்பு முறைகள் முதலியவை விளக்கப்பட வேண்டுமென்றும், "ஜஸ்டிசைட்" என்ற ஆங்கில வாரப்பத்திரிகையை விரைவில் வெளியிடுமாறு பெரியாரைக் கேட்டுக் கொள்வதாகவும், சமீபத்தில் வரப்போகும் 'தசரா' விடுமுறையில் மாணவர்களைக் கொண்டு இயக்கப்பிரசாரம் நடத்த வேண்டும் என்று எல்லா கழகத்தார்களைக் கேட்டுக் கொள்வதாகவும், அதிவிரைவில் திராவிட மாகாண மாணவர்கள் மாநாடொன்றைக் கூட்டவேண்டும் என்று வேண்டிக் கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது. தோழர் சி. ஆர். நாயுடு வந்தனோபசாரம் கூற கூட்டம் முடிந்தது.

* *

நாகை: 23-9-44ந் தேதி திராவிடர் கழக தலைவர் தோழர் ஆர். வி. கோபால் தலைமையில் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் கூடியது. அதுசமயம் செயலாளர் மலைக்கொழுந்துவால் சென்ற ஆகஸ்ட் மாதம் கழக வரவுசெலவு (கணக்கு) வாசிக்கப்பட்டு எல்லோராலும் ஏகமனதுடன் ஒப்புக்கொள்ளப்பட்டது. கழக நிர்வாகிகள் தொடர்ச்சியாய் மூன்று மாத சந்தா கொடுக்காமல் இருக்கிறவர்களுக்கு கடிதம்மூலம் தெரியப்படுத்த வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. நமது திராவிடர் கழகத்தின் தலைமை காரியாலயத்திலிருந்து சட்டதிட்டத்தையும் மெம்பர்கள் சேர்க்கும் புத்தகத்தையும் உடனே அனுப்புமாறு நமது தலைவர் பெரியார் ஈ. வெ. ரா.வுக்கு தபால் எழுத காரியதரிசிக்கு அதிகாரம்கொடுத்திருக்கிறது. கழகத்திற்கு மாதம்

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாவது ஒரு வார்த்தை சொல்லித் தொலைக்கக்கூடாதா?

இவ்வளவு தகராறு.தர்க்கம் கலகம் நடந்து ஒருத்தன்மேல் ஒருத்தன் கல்லு, சாணி, செருப்பு எறிந்து அடிதடி நடந்து போலீஸ் வந்து மக்கள் சாகின்ற காலத்தில் தைரியமாய் அல்லது கருணை வைத்து வெளிவந்து நிலைமையை விளக்கமுடியாத சுவாமிகள் இனி வேறு எந்தக்காலத்திற்குப் பயன்படப் போகிறார்கள்?

ஆகையால் கடவுள் சொன்னது சாஸ்திரம் என்பதை கட்டி வைத்துவிட்டு உன் அனுபவத்தையும் அறிவையும் பயன்படுத்தி தீபாவளியைப் பற்றி யோசித்துப்பார். அப்பா—தயவு செய்து கோபியாதே தம்பி!

"கோபம் செய்தால் எமன் கொண்டோடிப் போவான்" என்று சொன்னது சரியல்ல, கோபம் செய்தால் நீ ஏமாந்து போவாய் என்று நான் கூறுகிறேன். ஆகவே அறிவுக் கண்ணுடன் நாடு, இனம், மானம் ஆகியவைகளின் மீது பற்று வைத்து தீபாவளியைப் பற்றி சிறிது சிந்தித்துப் பார்?

## தீபாவளிக் கதை

தீபாவளிக் கதை பற்றி சுமார் 10 வருடங்களுக்கு மேலாக எழுதியும் பேசியும் வருகிறோம். ஆதலால் விரித்து எழுதவேண்டியதில்லை. என்றாலும் குறிப்பு கொடுக்கின்றோம்.

இது தீபாவளிக் கதை மிகவும் அதிசயமானதும், ஆபாசமானதும், இழிவும், ஈனத்தன்மையும், பொருந்தியதுமாகும்.

மகாவிஷ்ணுக்கு வாயில் காப்பாளராக இருந்த இருகாவலர்கள் உத்திரவின்றி உள்ளே விட மறுக்கப்பட்ட இரண்டு பிராமணர்கள் சாபத்தால் இரணியன் இரணியாக்ஷன் என்று இரண்டு ராக்ஷதர்களாகப் பிறந்து விஷ்ணுவால் கொல்லப்பட்டு சீக்கிரம் மோட்சமடைய வேண்டுமென்று ஏற்பட்டு விட்டதற்கிணங்க மூத்தவன் தேவர்களுக்கு தொல்லை கொடுத்து வந்தான். இளையவன் பூமியை பாயாகச் சுருட்டி எடுத்துக் கொண்டு ஒரு சமுத்திரத்திற்குள் நுழைந்து கொண்டான். தேவர்கள் வேண்டுகோளால் மூத்தவனைக் கொல்ல மகாவிஷ்ணு நரசிம்ம (சிங்க) அவதாரமெடுத்து வந்து கொன்றுவிட்டார். இளையவனான இரண்யாக்ஷனைக் கொல்ல மகாவிஷ்ணு வராக (பன்றி) அவதாரமெடுத்து வந்து சமுத்திரத்திற்குள் பாய்ந்து இரண்யாக்ஷனைக் கொன்று பூமியைக் கொண்டுவந்து பழையபடி விரித்து விட்டு போய் விட்டார்.

இதுவரை கதையில் அதிசயம் அதாவது பொய்யும் புளுகும் இருக்கலாமே தவிர இதில் ஆபாசமில்லை. இனிமேல் நடப்பது தான் ஆபாசம்.

என்னவென்றால் விஷ்ணு பல அவதாரம், பல ரூபம் எடுத்து இருக்கிறார். அவற்றின் பெரும்பாகம் ஆபாசமாகவே முடிகின்றன.

விஷ்ணு அசுரர்களால் கடைந்து எடுக்கப்பட்ட அமிர்தத்தை வஞ்சித்து தேவர்களுக்குக் கொடுப்பதற்காக அசுரர்களை ஏமாற்ற மோகினி அவதாரமெடுத்தார். அந்தக் காரியம் தீர்ந்த உடன் சிவனுக்கு அந்த மோகினி அவதாரத்தின் மீது ஆசை வந்து அவர் பின் திரிந்து மோகினி இணங்காமல் போய் இருவரும் பலாத்காரம் செய்து சிவன் இந்திரியம் பூமியில் கொட்டப்பட அந்த இந்திரியம் பூமியில் வெள்ளி தங்கமாக வேர் இறங்கிவிட்டன. அதுதான் இந்த வெள்ளியும் தங்கமுமாம்.

மற்றொரு சமயம் சிவன் பத்மாசுரனுக்கு வரம் கொடுத்தான். அவன் சிவன் தலையிலேயே கையை வைத்து சிவனைக் கொல்ல வர சிவன் ஓடி ஒழிந்து விஷ்ணுவைக் கூப்பிட விஷ்ணு மோகினி அவதாரமெடுத்து தந்திரம் செய்து பத்மாசுரனை இறக்கும்படி செய்துவிட்டுத் திரும்புகையில் சிவன் அவளைப் புணர்ந்தானாம். அப்போது அய்யனார் பிறந்தார். இப்படியுள்ள கதைகள் போலவே விஷ்ணு பன்றி அவதாரமெடுத்து இரண்யாக்ஷனைக் கொன்றுவிட்டுத் திரும்பும் காலையில், பன்றி தான் கொண்டு வந்த பூமியைத் தனக்கு என்ன வேண்டுமானாலும் செய்ய உரிமை இருக்கிறதென்று கருதி அந்தப் பூமியையே அந்த பன்றி புணர்ந்ததாம். பூமியும் அதற்கு சம்மதித்து இடம் கொடுத்ததாம். அப்போது பூமி கர்ப்பமாகி ஒரு குழந்தையையும் பெற்று விட்டதாம். அக் குழந்தைக்கு நரகாசுரன் என்று பெயர் இட்டார்களாம். ஏன் அப்பெயர் இட்டார்கள் என்றால் நரகலைச் சாப்பிடுகின்ற பன்றிக்கும் நரகலை சுமக்கின்ற பூமிக்கும் குழந்தை பிறந்தால் நரகன் என்று பெயர் இடாமல் வேறு என்ன பெயர் இடுவார்கள்?

இப்படிப்பிறந்த இந்தக்குழந்தை வங்காளத்துக்கும், அஸாமுக்கும் மத்தியில் உள்ள ஒரு பிரதேச அரசனாக இருந்து கொண்டு பிரம்மாவின் மனைவியின் காதணியையும் வருணனின் ஆயுதத்தையும் பிடுங்கிக்கொண்டு, இந்திரனின் சிம்மாசனத்தையும் தூக்கிவர எத்தனித்தானாம், அதோடு தேவர்களுக்கு தொல்லை கொடுத்தானாம்; உலகத்தையும் துன்புறுத்தினானாம். தேவர்களுக்காக கிருஷ்ண பகவான் வந்து இந்த அசுரனை வதம் செய்தாராம். அந்த நாளை கொண்டாடுவது தான் தீபாவளியாகும். இது என்ன கதை? இதில் அறிவு மானம் இருக்கிறதா?

இரண்யாக்ஷன் பூமியை சுருட்டித் திருடிக்கொண்டு போகக்காரணம் என்ன?

பூமி தட்டையாய் இருந்தால் அல்லவா சுருட்ட முடியும்? அதுதான் உருண்டை ஆயிற்றே? பூமியை உருட்டிக் கொண்டல்லவா போயிருக்க வேண்டும்.

அப்படியே சுருட்டினதாக வைத்துக்கொள்வதானாலும் சுருட்டினவன் எங்கே இருந்துகொண்டு பூமியை சுருட்டி இருப்பான்? ஒருசமயம் ஆகாயத்தில் தொங்கிக் கொண்டு சுருட்டி இருந்தாலும் பூமியில் இருந்த மலை, சமுத்திரம், ஆறு, ஜீவப்பிராணி முதலிய சகலமுந்தானே பாயாகச்சுருட்டப்பட்டு பாயுக்குள் சிக்கி இருக்க வேண்டும். அப்படி இருக்க அவன் பூமியை தூக்கிக்கொண்டு ஒளிய வேறு சமுத்திரமேது? வேறு சமுத்திரமிருந்திருந்தால் அது எதன் மீது இருந்திருக்கும்.

அப்படியே வைத்துக் கொண்டாலும் இந்தப் பூமியை திருப்பிக் கொண்டுவர விஷ்ணு அவதார

மெடுப்பானேன்! அதுவும் பன்றி அவதாரமெதற்கு? அப்போது அது ஆகாரமாக எதைத் தின்று இருக்கும்? எதையோ தின்று தொலைத்து போகட்டும்.

இந்தப் பன்றி பூமியைப் புணர ஆசைப்படுவானேன்? கொண்டு வந்ததற்குக் கூலியா? அப்படியே தான் இருக்கட்டும், இதற்கு இந்தப் பன்றியுடன் போகம் செய்ய பூமிதேவி இணங்கலாமா? இது என்ன கதை? திராவிட மக்களை அசுரன், இராக்ஷதன், அரக்கன் என்று கூறி அவர்களை இழிவு செய்ய எழுதினதல்லாமல் வேறு என்ன இதிகாசத்தில் ஆரியர் வருமுன்பு திராவிடர்கள் தானே ஆண்டுகொண்டிருந்திருக்க வேண்டும்? ஆரியர்கள், திராவிடர்களைக் கொல்வதானால் மானம், வெட்கம் பார்க்காமல் மிருகங்களுடன் புணர்ந்தானாலும் சரி, மலத்தைத் தின்றாலும் சரி, 'எப்படியான இழிவான அசிங்கமான காரியத்தைச் செய்தாவது கொல்லலாம்' என்கின்ற தர்மத்தை ஆரியர்களுக்கு போதிக்க வந்த மனுநூல் போன்ற ஒரு கோட் (code) தானே ஒழிய இப்புராணங்களுக்கு வேறு என்ன கருத்து சொல்ல முடியும்?

ஆகவே அப்பேர்பட்ட கதையில் ஒன்றான நரகாசுரன் கதையை நம்பி நாம் பண்டிகை கொண்டாடலாமா?, நாம் திராவிடரல்லவா?, நம் கடவுள்கள் மலம் தின்பதையும், நம் பெண் கடவுள்கள் பன்றியுடன் புணர்ச்சி செய்வதையும் ஒப்புக்கொள்ள நம்மால் முடியுமா? ஒப்புக்கொள்ளலாமா? நமக்கு மானம், வெட்கம், புத்தி ஒன்றுமே கிடையாதா?

நம் தலைவனை கொன்றதை நாம் கொண்டாடும் அவ்வளவு மானம் ஈனம் அற்றவர்களா நாம். நாம் வீர திராவிடரல்லவா? நம் இன மக்கள் தீபாவளி கொண்டாடலாமா?, அண்டிப்பாய் கொண்டாடாதீர்கள். கொண்டாடுவதானால் இந்தக் கதை கொண்ட புத்தகங்களை வாங்கி நடு வீதியில் வைத்து ஆண்கள் மிதியடியால் மிதி மிதியென்று மிதியுங்கள்; பெண்கள் முறத்தால் மொத்து மொத்து என்று மொத்துங்கள்.

## திராவிட கழகம் அமைப்புக் கூட்டம்

சேலம் மாநாட்டுத் தீர்மானத்தை அனுசரித்து மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் திராவிடக் கழகங்களை அபிவிருத்தி செய்யவும், அமைக்கவும் நாளை அக்டோபர் மாதம் 22-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்கு மதுரையில் எனது இல்லத்தில் ஒரு ஆரம்பக் கூட்டம் நடைபெறும். திராவிடக் கழகத்தில் ஆர்வமுள்ளவர்கள் எல்லோரும் இதையே அழைப்பாக ஒப்புக் கொண்டு வந்து சேரக் கேட்டுக் கொள்கிறேன்.

டபிள்யூ. பி. ஏ. சௌந்தர பாண்டியன்.

## வடசென்னை மத்திய திராவிடக் கழகம்

சென்னை வண்ணாரப்பேட்டை லக்ஷ்மி பாடசாலையில் 1-10-44-ல் காலை 10 மணிக்கு தோழர் திருவொற்றியூர் டி. சண்முகம் அவர்களின் தலைமையில் நடந்த மேற்படி கழக ஆலோசனைக் கூட்டத்தில் கீழ்க்கண்டவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தவிர 14-10-44 மாலை 7 மணிக்கு மேற்படியிடத்திலேயே மேற்படி கழகம் அமைக்க கமிட்டிக் கூட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொண்டு கூட்டம் பகல் 12 மணிக்கு இனிது முடிவுற்றது. தலைவர்: என். சிவரத்தினம், உபதலைவர்கள்: திராவிட வீரன் எம். கே. முத்து (All India Champian) எம். வைத்தியலிங்கம், செயலாளர்: ஜி. கிருஷ்ணசாமி, உபசெயலாளர்கள்: டி. வி. சுந்தரமூர்த்தி, ஆர். தாமன், பொருள் காப்பாளர்: கே. பழனிச்சாமி, அங்கத்தினர்கள் 31.

## மாகாண மருத்துவர் கமிட்டிக் கூட்டம்

மன்னச்சநல்லூர்: ஷை கூட்டம் அக்டோபர் மாதம் கடைசி வாரத்தில் திருச்சியில் நடைபெறும் என ஷை கமிட்டி அமைப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## வேண்டுகோள்

தோழர்களே, நம் கழக உறுப்பினர் பட்டியை அடுத்தவாரம் முதல் வெளியிட இருப்பதால் ஆங்காங்கு உறுப்பினர் சேர்க்கும் தோழர்கள் தயவு செய்து சேர்த்த உறுப்பினர்கள் எண்ணிக்கையையும், வசூலித்த சந்தா பகுதியையும் அருள் கூர்ந்து இங்கு அனுப்ப வேண்டுவதுடன், தங்கட்குக் கிடைத்த உறுப்பினர் சீட்டுப் புத்தகங்களில் பகுதியாவது சேர்த்தனுப்பிவிட்ட பிறகே இனி தேவைக்கு எழுதவும் வேண்டுகிறோம். இதுவரை சுமார் 12000 அங்கத்தினர் ரசீதுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

ஆனால் இதுவரை 3000 அங்கத்தினர்களே சேர்க்கப்பட்டிருப்பதாய் தகவல்கள் வந்திருக்கின்றன. 1000 அங்கத்தினர்கள் சேர்த்த ரசீதுகளே வந்திருக்கின்றன. அருள் கூர்ந்து இதுவரை சேர்த்த ரசீதுகளை உடனே அனுப்புங்கள்—கவலையெடுத்து சுறுசுறுப்பாய் அங்கத்தினர்களைச் சேருங்கள். கார்டுகளில் கையொப்பமிட்டு இதுவரை 500 கார்டுகளே வந்திருக்கின்றன. கிராமத்தில் உள்ளவர்கள், புத்தகமில்லாத ஊரில் இருப்பவர்கள் உடனே கார்டுகளில் கையொப்பமிட்டு அனுப்பவும்.

திராவிடர் கழகம்
தலைமை நிலையம், ஈரோடு.

## தஞ்சை திராவிட மாணவர் மாநாடு

ஷை மாநாடு தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்க மன்றத்தில் 26-9-44-ஆம் தேதி காலை 9-30 மணிக்கு புரட்சிக் கவி பாரதிதாசன் (கனக சுப்புரத்தினம்) அவர்கள் தலைமையில் சிறப்பாக நடந்தது. பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்து நீண்ட சொற்பொழிவாற்றினார். தோழர் பி. ஆர். பாண்டியன் யாவரையும் வரவேற்றார். தலைவர் புரட்சிக் கவி பாரதிதாசன் தமது அழகிய சொற்பொழிவை நிகழ்த்தினார். தலைவருக்கும், பெரியாருக்கும் மாணவர்கள் வாழ்த்துப் பத்திரம் வாசித்தளித்தனர்.

பிற்பகல் மாநாட்டில் தோழர்கள் புலவர் ந. மு. மாணிக்கம், பி. ஜனார்த்தனம் பி. ஏ., எஸ். தவமணி இராசன், என். கிருணாநந்தம், இரா. நெடுஞ்செழியன், சி. என். அண்ணாதுரை முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். கும்பகோணம் "லேவால் ரேடியோ" கம்பெனியாரின் ஒலிபெருக்கி வைக்கப்பட்டிருந்தது.

தமிழ் நாட்டில் ஆங்காங்குள்ள மாணவர் கழகங்களுக்குத் திராவிட மாணவர் கழகம் என்று பெயர் மாற்றவேண்டுமென்பதாம் தீர்மானம் நிறைவேறியது

# திருவண்ணாமலை கோயில் வழக்கு

திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேஸ்வரர் கோவில் தேவஸ்தான தர்மகர்த்தாக்களான தோழர்கள் T, S முத்துகுமாரசாமி முதலியார், M. B ரங்கசாமி செட்டியார், அழகப்பசெட்டியார் ஆகியவர்கள் ஏகமனதாக 3-12-1940ல் ஷை கோவில் தரிசனார்த்திகளின் சௌகரியத்தை முன்னிட்டு அர்த்த மண்டபத்திற்குள் வழக்கமாய்ப் போகும் சிப்பந்திகள், மந்திர புஷ்பக்காரர்கள் ஆகியவர்கள் தவிர வேறு யாரும் போகக்கூடாதென்று நிறைவேற்றிய தீர்மானத்தின் பேரில் ராவ்சாஹிப் M. S. சேஷாச்சல அய்யர் முதலாய ஐந்து பிராமணர்கள் தங்கள் சார்பாகவும் மற்றும் எல்லாப் பிராமணர்கள் சார்பாகவும் பிராமணர்கள் மாத்திரம் அதாவது இதர ஜாதி இந்துக்கள் நீங்கலாக அர்த்தமண்டபத்திற்குள்சென்று தரிசிக்க ஏகதேசபாத்தியதையுடையவர்கள் என்று ஸ்தாபிதம் செய்யவும், தர்மகர்த்தாக்கள் மீது அவ்வாறே சாஸ்வத தடையுத்தரவு பெறவும் 1941-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் தொடர்ந்த தாவாவில் (O.S. 171/41-ல்) 13-9-44-ல் திருவண்ணாமலை ஜில்லா முனிசீப் தோழர் ஜி. கெ. தாமோதரராவ் அவர்கள் பி. ஏ., பி. எல். தீர்ப்புக் கூறினார்.

3-ஆம் பிரதிவாதி தோழர் அழகப்ப செட்டியார் ஷை தாவா டிக்கிரியாவதற்கு சம்மதம் என்று ஸ்டேட்மெண்ட் போட்டார். மற்ற இரு தர்மகர்த்தாக்களும் எதிர்வாதம் செய்தார்கள். இடையே 2-ஆம் பிரதிவாதி தோழர் ரங்கசாமி செட்டியார் வகித்த தர்மகர்த்தா ஸ்தானம் காலியானது. அதுக்குப் பின்னிட்டு தர்மகர்த்தாவான தோழர் உத்தண்டிப் பிள்ளை 4-ஆம் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டு அவரும் எதிர்வாதம் செய்தார். வாதிகளுக்காக திண்டுக்கல் அட்வகேட் தோழர் விஸ்வநாத அய்யர், திருவண்ணாமலை அட்வகேட்டுகள் தோழர்கள் கே. சீதாராம சாஸ்திரியார், எம். ஏ., நடராஜ அய்யர் ஆகியவர்களும் 1-ம் பிரதிவாதிக்குத் திருவண்ணாமலை அட்வகேட் எஸ். ரங்காச்சாரியாரும், 3-ம் பிரதிவாதிக்கு தோழர் என். நீலகண்டராவும், 4-ம் பிரதிவாதிக்கு எஸ். ராமச்சந்திர தீட்சதரும் ஆஜராகி வாதித்தார்கள். வாதிகள் சார்பில் ராவ்சாஹிப் எம். எஸ். சேஷாசல அய்யர், கிருஷ்ணசாமி குருக்கள், ஹரிஹர சாஸ்திரிகள், அரியலூர் வெங்கிடேச சாஸ்திரிகள் ஆகியவர்களும் 1, 4 பிரதிவாதிகள் சார்பாய் தோழர் எம். பி. ரங்கசாமி செட்டியார் EX. M. L. C., கோயில் அமீனா தனக்கோட்டி முதலியார், வக்கீல் குமாஸ்தா குப்புசாமி செட்டியார், கோயில் மணியம் சின்னசாமி தேசிகர், காஞ்சி பரவஸ்து ராஜகோபாலாச்சாரியார் பி. ஏ., (Lecturer National War Front, Saidapet, Madras) அவர்களும் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர்.

இதற்கிடையே இதற்கு முன் ஜில்லா முன்சிப்பாயிருந்த தோழர் நாராயணசாமி முதலியார் அவர்கள் பி. ஏ., பி. எல்., (TA, 374/41-ல்) 13-12-41-ல் வாதிகள் கோரியவண்ணம் பிரதிவாதிகள் பேரில் தற்காலிக தடையுத்தரவு விதித்ததும், அதையொட்டி தர்மகர்த்தாக்கள் செய்த அப்பீலில் (C. M. A. 23/42-ல்) 31-3-42-ல் வேலூர் ஜில்லா ஜட்ஜ் தோழர் ஏ எஸ். பஞ்சாபகேச அய்யர் M. A., I. C. S., Bar-at-law அவர்கள் செய்த உத்தரவில் 'இதர ஜாதி இந்துக்கள் நீங்கலாக' என்றிருப்பதை எடுத்துவிட்டு ஒரு திருத்தம் செய்ததும் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

ஜில்லா முன்சிப், அன்று சாயந்திரம் ஜன சமுத்திரம்போல் காணப்பட்ட கோர்ட்டு ஹாலில் தமது சுமார் 48-பக்கங்கள் டைப் செய்யப்பட்டதொரு விஸ்தாரமான ஜட்ஜ்மெண்டைப்படித்து முடிக்க சுமார் 1-மணி நேரத்துக்குமேல் ஆயிற்று. (அவர் தீர்ப்பின் சாராம்சம் அடுத்தவாரம் வெளிவரும்)


போர் எவ்வளவு வெற்றிகரமாக நடந்தாலும்,
நோய்வாய்ப்பட்டவர்களுக்கும்,
காயம்பட்டவர்களுக்கும்,
போர்க்கைதிகளுக்கும்

**உங்களுடைய உதவி அவசியம் தேவை**

**"செஞ்சிலுவை"**

என்ற தலைப்பில்

**மே. த. கவர்னரின்**

யுத்த நிதிக்கு
உதவி செய்வதன் மூலம்
ஒரு தலைசிறந்த நோக்கத்திற்காக
வேண்டியிருக்கும் மூல சக்திகளைப்
பெருக்குங்கள்.


## நுங்கம்பாக்கம் தமிழ்க் கழகம்

சென்னை: இக்கழகத்தின் முதற்கூட்டம் 25-9-44ல் அகஸ்தீஸ்வரர் கோவிலில் தோழர் கே. இராசகோபாலன் எம். ஏ., எல். டி., அவர்கள் தலைமையில் கூடியது. தோழர் வீ. முனுசாமி பிள்ளை பி. ஏ., அவர்கள் திருக்குறளை கல்லாமையால் வந்த நிலைமைகள் என்ற பொருள்பற்றி பேசினார்கள். நன்றி கூறலுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு

1944-ஷு அக்டோபர்-மீ 7-உ

# திராவிடர் கழகத் தொண்டு

## இளைஞர்களே

தென்இந்தியர் நல உரிமை சங்கம் என்றும், பார்ப்பனரல்லாதார் கட்சி என்றும், மற்றும் தமிழர் கட்சி என்றும், பல பெயர்களால் அழைக்கப்பட்டு வந்த நமது ஸ்தாபனத்திற்கு சேலம் மாநாட்டில் திராவிடர் கழகம் என்று பெயர் கொடுக்கத் தீர்மானித்தபடியும் அந்தப் பெயரால் அங்கத்தினர்கள் சேர்த்து ஸ்தாபன அமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தீர்மானித்தபடியும் அவை பற்றி இந்த ஒருமாத காலம் தமிழ்நாட்டில் தக்கதொரு எழுச்சி ஏற்பட்டிருக்கிறது; அது குறித்தும் ஆங்காங்கு மாநாடுகள் நடைபெறுவது குறித்தும் தீவிரமாய் அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டு கழகங்கள் நிறுவப்படுவது குறித்தும் நமது கட்சி, கவலையும்; பொறுப்பும் உள்ள மக்கள் ஆச்சரியமும், மகிழ்ச்சியும் அடையாமலிருக்க மாட்டார்கள்.

இன்று வரை தமிழ்நாட்டில் 3000-க்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். (திருச்சி ஜில்லா 1000 அங்கத்தினர்களைச் சேர்த்துவிட்டது. தஞ்சை ஆயிரத்துக்கு நெருங்குகிறது) என்றும் அந்த அங்கத்தினர்களைக் கொண்டு சுமார் 100—கழகங்கள் வரை புதுப்பித்தும் புதிதாய் அமைக்கப்பட்டும் இருக்கிறதென்றும் செயற்குழுவினர் பெயர்களுடன் தகவலும் தலைமைக் கழகத்திற்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது; என்ற சேதியைக் கேட்பதானது மேலும் மகிழ்ச்சிக்குரியதும் பாராட்டக்கூடியதுமானாலும் இதன் பயன் நம் எதிரிகளுக்கும், எதிரிகளின் கூலிகளுக்கும் சுயமரியாதைப் போர்வை போர்த்துக்கொண்டு சமய வெறியர்களாகவும், சமய சஞ்சீவிகளாகவும், உள்ளே இருந்துகொண்டே கேடு செய்யக் கருதி நல்ல பிள்ளைகள் போல் நடித்து வெளியே விஷயம் வெளியானதும் வெட்டித்தள்ளப்பட்டவர்களாகவும், உள்ளவர்களுக்கும் மற்றும் கழகத்தின் பேரால் இனி பிழைக்க முடியாமல் போய்விட்டதே என்று கருதிய சில கட்சி வயிற்றுப் பிழைப்பாளர்களுக்கும் இதைப் பார்த்தும் கேட்டும் வயிற்று உளைச்சல் ஏற்படவும் அதன் காரணமாய் கண்டபடி உளறிக்கொட்டவும் வசைபுராணம் பாடி எதிரிக்குக் கொடுத்துக் கூலி பெறவுமான காரியங்கள் செய்யாமலிருக்க முடியாததுமான நிலை ஏற்பட்டுவிட்டது. இது ஒருபுறமிருக்க,

இன்று திராவிடர் கழகத்துக்கு ஏற்பட்ட பரபரப்பு உணர்ச்சிக்கும், ஆயிரக்கணக்கான மக்கள் அங்கத்தினர்களாகச் சேர்வதற்கும், அமைப்புகள் ஆங்காங்கு அமைவதற்கும் புதிய காரணங்கள் இல்லாமல் இல்லை. "தென் இந்தியர் சங்கம் S I L F. (ஜஸ்டிஸ்கட்சி) என்றால் ஜமீன்தார், மிராசுதார், அரசியல் வியாபாரத்தால் பதவி பணம் பெற தவிக்கும் வியாபாரிகள், பெரியவக்கீல்கள், கட்சியின் பேரால் வயிறு கழுவும் மக்கள் ஆகியவர்கள் கட்சி" என்று மக்கள் கருதும்படியாக இருந்து வந்து அதனால் கட்சி பொதுமக்களின் ஆதரவற்ற கட்சி ஆனதுடன், கட்சிக் கூட்டமும், கட்சி நடவடிக்கைகளும் அரண்மனைகளிலும், மாளிகைகளிலும், பத்திரமான மண்டபங்களிலும் இருந்துகொண்டு இருந்த காலத்தைவிட இன்று திராவிடர் கழகமாக பெயர் கொண்ட உடன் இன்று (ஜஸ்டிஸ் கட்சி) மரத்தடியிலும் மக்கள் வெளியிலும் இருந்துகொண்டு பொது மக்களுக்கு சிறப்பாக பல தடவை சிறை சென்றவர்களும், பட்டம் பதவியை, வயிற்றுப் பிழைப்புகூட இதன் பேரால் விரும்பாதவர்களும், பலர் செய்த துரோகங்களுக்கும் விஷமத்தனமான பழிச்சொற்களுக்கும் பயப்படாமல், அடிக்கும் உதைக்கும் பலிதானத்துக்கும் கூட ஒடுங்காத கலங்காதவர்களும், பட்டிக்காடு முதல் பட்டணம் வரை உள்ள திராவிடர்களில் பெரும்பாலோருடைய மனதைக் கொள்ளை கொள்ளும்படி உண்மையை எடுத்துக் கூறி பாமர உள்ளத்திலும் திராவிட உணர்ச்சி பொங்கி எழும்படி செய்ய உடலையும் உள்ளத்தையும் கொடுத்து உண்மையாய் தொண்டாற்றும் பட்டதாரிகளான பல இளைஞர்களும் ஆன மக்களிடத்தில் வந்துவிட்டதால் 'தனது குலத்தில் ஐயப்படவேண்டியவன்' தவிர மற்றவர்கள் யாவரும் ஏதாவதொரு விதத்தில் 'ஜஸ்டிஸ் கட்சியை' ஆதரித்துத் தீரவேண்டிய நிலைக்கு வந்துவிட்டது. அல்லாமலும் திராவிடர் நலத்தைக் காட்டிக்கொடுத்துப் பயன்பெற வேண்டும் என்கின்ற எண்ணத்துடன் முழு கட்டுப்பாடாய்ச் சிலர் செய்து வரும் விஷமத்தனங்களைக் கண்டு அப்படிப்பட்ட அவர்களுக்குத் தகுந்த பதில் கொடுக்க வேண்டும் என்கின்ற அவாவில் தனித்தனி முறையில் பொது மக்களே முயற்சி எடுத்துக் கொள்ளும் நிலைக்கும் வந்துவிட்டது.

ஆனால் இதுவே போதும் என்று நாம் கருதவில்லை. இனிதான் நாம் செய்யவேண்டிய வேலை இருக்கிறது. தமிழ்நாட்டில் சேலம் தீர்மானப்படி குறைந்தது 10000 அங்கத்தினரும், 100-க்கு குறைவில்லாத கழக அமைப்புகளாவது கூடிய சீக்கிரம் ஏற்பட்டால்தான் திராவிடநாட்டின் மற்ற பாகங்களையும், தமிழ்நாட்டைப் பின்பற்றச் செய்ய ஏதுவாய் இருக்கும்.

இதுவரை 10000 அங்கத்தினர்கள் சேர்க்கும் ரசீதுகளுக்கு மேலாகவே தலைமைக் காரியாலயத்தில் இருந்து பல இடங்களுக்கும் அனுப்பட்டிருப்பதாக தெரிகிறது. அனுப்பப்பட்டவர்களுக்கு 2, 3 ரிமைண்டர், ஞாபகப்படுத்தும் குறிப்புகள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. இந்த மாதத்தில் அநேகமாய் இந்த 10000 பேர்கள் சேர்க்கப்பட்டாய்விட்டால் தான் தலைவரும் மற்றவர்களும் வேறு காரியங்கள் பார்க்க முடியும்.

நம் மாகாணத்தின் மற்ற இடங்களிலிருந்து சேலம் மாநாட்டுத் தீர்மானங்களைப் பாராட்டியும் தங்கள் நாட்டில் வந்து தமிழ்நாட்டைப் போலவே வேலை துவக்கும்படி வருந்தி அழைத்தும் தலைவருக்குப் பல

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கடிதங்கள் வந்தவண்ணமிருக்கின்றன.

மற்றொரு மகிழ்ச்சிக்கு உரிய சேதி என்னவென்றால் சேலம் தீர்மானத்தைப் பற்றி நம் எதிரிகளும் நம் துரோகிகளும் செய்த விஷமப்பிரசாரத்தின் பயனாய் அவற்றைப் பத்திரிக்கைகளில் கண்ட வெளி மாகாணத்தார் பஞ்சாப், லக்னோ முதலிய மாகாணங்களில் உள்ள சில தோழர்களால் தங்கள் மாகாணங்களுக்கும் வந்து கழகங்கள் அமைக்கும்படியும் திராவிட கழகத்தோடு சேர்த்துக்கொள்ளும்படியும் வேண்டிக் கொண்டிருக்கிறார்கள். திருவாங்கூர் கொச்சி முதலிய சமஸ்தானங்களிலிருந்தும் தாங்களும் திராவிடர்கள் என்றும் தங்களையும் சேர்த்துக்கொண்டு வேலை செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கடிதங்கள் வந்திருப்பதாகவும் தெரிகிறது.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் மத்திய மாகாணத்தையும் மகாராஷ்டிரர் உள்ள மற்ற பாகத்தையும் சேர்த்துக்கொண்டால் நலமாக இருக்குமென்றும் அவர்கள் தயாராய் இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தது வாசகர்கள் அறிந்ததேயாகும்.

ஐக்கிய மாகாண டாக்டர் மூஞ்சே அவர்கள் திராவிடர் கழகத்தின் சமயம், சமுதாயம் ஆகியவை சம்பந்தமான எல்லாத் தீர்மானங்களையும் ஏற்றுக்கொள்வதாகவும், வேண்டுமானால் இந்து மகாசபை மகாநாட்டில் வைத்து ஏற்றுக்கொள்ளச் செய்வதாகவும் இந்தியா பூராவுக்கும் திராவிடர் கழகம் வேலை செய்ய தாம் ஒத்துழைப்பதாகவும் கூறி இருக்கிறதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவைகளையெல்லாம்விட மற்றொரு அதிசயம் என்னவென்றால் தோழர் எம். என். ராய் அவர்கள் சுமார் 2-வருஷங்களுக்கு முன்பாகவே திராவிடர்கழக சமய சமுதாய தீர்மானங்களைப் பாராட்டி மற்று தனது கட்சியுடன் இக்கொள்கைகளையும், திராவிடநாடு பிரிவினையையும் சேர்த்துக்கொண்டு வேலை செய்யச் செய்கிறேன் என்றும் சொன்னதோடு பல இடங்களில் அந்தப்படி செய்தும் இருக்கிறார். ஆகவே நமது கட்சி நமது கொள்கை நமது திட்டம் ஆகியவைகள் இன்று எல்லா இந்தியாவிலுள்ள மற்ற முக்கியக் கட்சிகள் கவனிக்கவும், பின்பற்றவும், பங்கு கொள்ள ஆசைப்படவும் செய்திருக்கிறது என்பதற்கு இது போதுமான ஆதாரங்களாகும்.

நம் எதிரிகளின் எதிர்ப்புப் பிரசாரமும் நம் துரோகிகளின் விஷமப் பிரசாரமும் ஒரு அளவுக்கு நமக்கு இந்த நிலை ஏற்பட உதவி செய்திருக்கிறது என்பதும் மனமார ஒப்புக்கொண்டு ஒளிக்காமல் சொல்லவேண்டிய காரியமாகும்.

ஆகவே ஆர்வமும் ஆற்றலும் எழுச்சியும் உள்ள தமிழ்நாட்டு வாலிப இளைஞர்களே உங்கள் கடமை சேலத்தில் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொடுத்ததோடு நின்றுவிடவில்லை என்றும் இம்மாதத்திற்குள் நிபந்தனையை நிறைவேற்றிக் கொடுத்துவிட்டு வேறுவேலை பார்க்கவேண்டிய பொறுப்பிலும், கடமையிலும் இருக்கிறீர்கள் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அங்கத்தினர் சேர்க்கும் ரசீது புத்தகத்திற்கு தலைமை காரியாலயத்துக்கு எழுதுங்கள். எழுதுகிறவர்கள் முதலில் அங்கத்தினராகச் சேர்த்துவிட்டதாக ரிப்ளைகார்டில் எழுதிவிட்டு ரசீதுகளுக்கு எழுதுங்கள்.

## சென்னை மாவட்ட திராவிடர் (ஜஸ்டிஸ்) கழகம்
### நிர்வாகக் கமிட்டி தேர்தல் கூட்டம்

9-10-44 திங்கள் மாலை 7 மணிக்கு பெத்துநாயக்கன்பேட்டை லாயர் சின்னதம்பி முதலி தெரு 4-வது இல்லத்தின் மாடியில் நடைபெறும். ரீஜினல் லீடர் தோழர் டி. சண்முகம் அவர்கள் தலைமை வகிப்பார்.

அதுசமயம் 1. சென்னை நகரில் பல பாகங்களிலும் கிளைச்சங்கங்கள் அமைத்தல். 2. சர்க்கில் கமிட்டிகள் தேர்தல். 3. சென்னை நகர மத்திய கழகத்திற்கு ஒவ்வொரு வட்டத்திலிருந்தும் இரண்டு பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து, நிர்வாகக் கமிட்டி அமைத்தல், உறுப்பினர்கள் சேர்த்தல் ஆகிய மற்றும் பல முக்கிய விஷயங்கள் நடைபெற வேண்டியிருப்பதால், சென்னை நகரின் எல்லா வட்டங்களிலுமுள்ள இயக்கத் தோழர்கள் இதையே அழைப்பாகக் கருதி தவறாது வர வேண்டப்படுகிறது.

காரியதரிசி.

## சமரச முறிவு பற்றி பெரியார் ஈ. வெ. ரா.

காந்தி-ஜின்னா சம்பாஷணை முறிவு பற்றி பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்கள் 29ந்தேதி பிற்பகல் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை விபரம்:

"இம் முறிவு எதிர்பார்க்கப்பட்டதேதான். சமரசம் ஏற்பட்டிருந்தாலுங்கூட அதனால் யாருக்குமே நல்ல பலனை அளிக்கமுடியாது. பிரிட்டிஷ் சர்க்கார் இந்த சாக்கைக்காட்டி, மேலும் தங்கள் பொறுப்பை கழித்துக்கொள்ளவே இது நல்ல உதவியாய்ப் போய்விட்டது. இரண்டு தலைவர்களும் சந்திப்பின்முடிவு என்னவாகும் என்பதை தீர்க்காலோசனை செய்துகொள்ளாமலேயே சந்தித்துவிட்டார்கள். ஆகையால் அரசியல்-சமூககாரியங்களில் கேடும் சிக்கலும், கஷ்டமுமான நிலைமையே ஏற்பட்டுவிட்டது."

## "குடி அரசு" செய்தித் தாளாகவா இருக்கவேண்டும்?

நாம் பல அறிவிப்புகள் வெளியிட்டும் இன்னும் நீண்ட செய்திகள் ஏராளமாக வந்து குவிகின்றன. காகிதமில்லாத நெருக்கடியான காலத்தில் இவ்வார 'குடி அரசு' செய்திகளுக்கு ஆகவே 16-பக்கங்களுடன் வெளியிட வேண்டிய அவசியம் நேரிட்டதிலிருந்தே நேயர்கள் எங்கள் கஷ்டத்தை உணர்ந்துகொள்வார்கள் என்று நம்புகிறோம். இனி திராவிடர் கழகச் செய்தியும் அதுவும் சுருக்கமாக வரும் சில செய்திகளைத் தவிர இதர செய்திகளை சிறிது காலத்துக்கு வெளியிட முடியாதென்பதை நேயர்களுக்கு கண்டிப்பாகத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்பர்களே 'குடி அரசு' வெறும் செய்திகளைத் தாங்கிவரும் 'கேட்லாக்'காக மிளிரவேண்டுமா?, அல்லது அறிஞர் பொன்மொழிகளும், பெரியார் அவர்களின் அறிவு விளக்கந்தரும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் சொற்பொழிவுகளும் கொண்டதாக மிளிர வேண்டாமா? என்பதை நேயர்களே எண்ணிப் பாருங்கள். ஆகையால் செய்திகளுக்கும் சாதாரண கட்டுரைகளுக்கும் இனி 'குடி அரசி'ல் இடம் ஒதுக்க முடியாமைக்கு நிருபர்கள் பொறுத்தருள வேண்டும்.

ஆசிரியர்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# டாக்டர் மூஞ்சே—பெரியார் சந்திப்பு விபரம்

## 2-மணி நேர சம்பாஷணை

### சு. ம. வுக்கு மூஞ்சே சம்மதம்

இந்துமகா சபை உபதலைவர் டாக்டர் பி. எஸ். மூஞ்சே அவர்கள் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களுடன் 29-ஆம் தேதி பிற்பகல் 4-30 மணிக்கு திராவிடத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களை தென்னூரிலுள்ள வழக்கறிஞர் தோழர் வேதாசலம் அவர்கள் இல்லத்தில் சந்தித்தார். டாக்டர் மூஞ்சே அவர்களுடன் திருச்சினாப்பள்ளி மில்ஸ் மானேஜிங் டைரக்டர் ராம்ஜி மூல்ஜி அவர்களும் வந்திருந்தார்.

பெரியாருடன் தோழர்கள் சி. என். அண்ணாதுரை, கே. வீ. அழகிரிசாமி, டி. டி. நாயகம், சங்கரன் முதலியோரும் இருந்தனர்.

பெரியார் அவர்கள் இந்துமகா சபை டாக்டர்கள் மூஞ்சேயையும், நாயுடுவையும் அன்புடன் வரவேற்று உட்காரச் சொன்னார்.

டாக்டர் மூஞ்சே அவர்கள் முதலில் தென்னிந்தியாவின் நிலைமை பற்றி பொதுவாய் சம்பாஷணையைத் தொடங்கினார்: பெரியார் அவர்களும் உடனே நிலைமைகளை எடுத்துக் கூற ஆரம்பித்தார். சுமார் 20 வருட காலத்திற்குள்ளாக இந்நாட்டில் காங்கிரஸுக்கு, காந்தியார் அரசியலில் பிரசித்தம் பெற்றவுடன் ஏற்பட்ட செல்வாக்கால் தென்னிந்திய திராவிட மக்களின் வர்த்தகம், கைத்தொழில் ஆகியவை எங்ஙனம் வடநாட்டாரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன வென்பதையும், அரசியலில் பிராமணர்கள் எவ்வளவு ஆதிக்கத்தைப் பெற்றிருக்கின்றனர் என்பதையும், சர்க்கார் நிர்வாகத்தில் காங்கிரசின் காரணமாக பிராமணர்கள் எவ்வளவு அதிகமாய் முக்கியமான உத்தியோகங்களை எல்லாம் அடைந்திருக்கின்றனர் என்பதையும், ஜஸ்டிஸ்கட்சி தேர்தலில் தோற்றுப்போன காரணம் பற்றியும், இப்போதுள்ள நிலைமையிலும், இனியும் பிராமணரல்லாதார் வெற்றிபெற முடியாது என்பதற்குள்ள காரணங்களையும் தெளிவாக எடுத்துரைத்தார். மற்றும் திராவிடஸ்தான் கேட்கப்படவேண்டியதற்கும் அதனாலேயே உண்மையான விடுதலை கிடைக்க முடியும் என்பதற்கும், காங்கிரசும் அதன் பெயரால் பிராமணர்களுமே முக்கிய காரணமாவார்கள் என்பதையும் கூறினார்.

டாக்டர் மூஞ்சே அவர்கள் சுமார் அரை மணி நேரத்திற்கு மேல் மிகப்பொறுமையாய்க் கேட்டுக்கொண்டிருந்து விட்டு, எல்லாவற்றிலும் உள்ள நியாயங்களை உணர்ந்து கொண்டார். ஆனால் இந்துக்கள் என்பவர்கள் முஸ்லிம் மதத்திலோ, கிறிஸ்து மார்க்கத்திலோ, சேருவதை மட்டும் தான் விரும்பவில்லை என்றும் அது தவறான காரியம் என்றும் தெரிவித்துக் கொண்டார்.

பெரியாரின் சு.ம.கட்சிக் கொள்கைத் திட்டங்களைப் பற்றியும், அதுசம்பந்தமான சம்பாஷணையில் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் பற்றியும் பெரிதும் தன் சொந்தப் பொறுப்பிலே மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்ளுவதாகவும், இதைத் தொடர்ந்து ஒரு திட்டமாகத் தயாரித்து டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் மூலம் தனக்குக் கிடைக்கச் செய்தால் பிறகு அதை இந்துமகாசபையை ஏற்க முயற்சி செய்வதாகவும் உறுதி கூறிக் கொண்டார். சம்பாஷணையில் இருவர்களாலும் சொல்லப்பட்டு சர்ச்சை செய்யப்பட்ட விஷயங்களாவன:—

1. இந்து என்றால் மதாசார விஷயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடாது.

2. இந்து சமுதாயம் என்றால் இந்துக்கள் என்பதல்ல. இந்திய இனம் என்பதாகும், ஆதலால் இந்திய மக்கள் யாவரும் ஒரே வகுப்பாய் மாற்றி அமைக்கப்படவும், அதற்கான வழிகளைக் கண்டுபிடித்து எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

3. மக்களை மதம் மாறவிடக் கூடாது; பார்ப்பனீயம் அடியோடு ஒழிக்கப்படவேண்டியதே.

4. இன்றுள்ள மதச் சடங்குகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் மக்களை ஆளாகவிடாமல் அவைகளை கைவிடச் செய்ய வேண்டும்.

5. சர்க்கார் காங்கிரஸ், ஆதிக்கத்திலோ ஆரியர் ஆட்சியிலோ இல்லாமல் பார்த்துக்கொள்வது.

6. சட்டசபை, ஸ்தல ஸ்தாபனங்களில் பிராமணர்களுக்கென்று ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பது. பிராமணர்கள் பொதுத் தொகுதியில் ஓட்டுக் கொடுக்கவோ; நிற்கவோ இல்லாமல் விதி ஏற்படுத்துவது, எல்லா சமூகங்களுக்கும் எண்ணிக்கை விகிதாசாரத்தில் ஸ்தானங்களை அளிப்பது.

7. மாகாண மந்திரிசபையில் பிராமணர் ஒருவர்கூட கூடாது.

8. இந்தியா பூராவும் வேண்டுமானாலும் திராவிடஸ்தான் நாடாக ஆட்சி பிரிவு வேலை செய்வது.

9. அந்நியர் ஆட்சிக்கு இடமில்லாமல் இந்தியாவின் சுதந்திரத்திற்காக இந்துமகாசபையும், திராவிடர் இயக்கமும் ஒத்து வேலை செய்துவருவது" என்பவைகளைப் பற்றியாகும்.

சம்பாஷணை விஷயங்களை விளக்கிக் கொள்ளவும், அவைகளை திட்டமாகத் தயாரித்து இரண்டு கட்சிகளும் ஒத்துக்கொள்ளும்படியும், அடுத்தாற்போல் கடிதப் போக்குவரத்து செய்ய டாக்டர் நாயுடு அவர்கள் இரண்டு தலைவர்களாலுமே ஒப்புக்கொள்ளப்பட்டார்.

மாலை 4-30 மணி முதல் 6-30 வரை சம்பாஷணை நடந்து முடிவுற்ற பின்னர், தலைவர்களுக்கும், மற்றும் விஜயம் செய்திருந்தவர்களுக்கும் தேநீர் விருந்தொன்று அளிக்கப்பட்டது. இதன்படியே காரியதரிசி தோழர் அண்ணாதுரை அவர்களால் எழுதிய ஒரு அறிக்கையை அந்த இடத்திலேயே மெயில், இந்து, சு. மி., தினமணி, தினசரி முதலிய ரிபோர்ட்டர்கள் வசம் கொடு

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## ராடிக்கல் டெமாக்ரடிக் கட்சி மாநாடு

### சென்னையில் நடத்த முடிவு

சென்னை, அக். 4-

24-9-44 (ஞாயிற்றுக்கிழமை) சென்னை நகர் ராடிக்கல் டெமாக்ரடிக் கட்சியின் நிர்வாகக் கமிட்டி கூடியது. விசேஷ அழைப்பின் பேரில் தோழர்கள் வி. ஜி. குல்கர்னி (ராடிக்கல் கட்சியின் மத்திய நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்) டி. கோபிசந்த் (ஆந்திர மாகாண கட்சியின் பொதுக் காரியதரிசி) முதலியவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

தோழர் கே. எஸ். ஷெட்டி (நகரக் கட்சியின் பொதுக் காரியதரிசி) கட்சி வேலைகளைப் பற்றி அறிக்கை சமர்ப்பித்ததன் பேரில், அக்டோபர் மாதம் 22-ஆம் தேதி சென்னை நகர ஆரம்ப மாநாட்டிற்குத் தலைமை வகிக்க அகில இந்திய கட்சியின் பொதுக் காரியதரிசி தோழர் வி. எம். தார்குண்டே (பார்-அட்-லா) அவர்களை அழைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மாநாட்டிற்குள் அங்கத்தினர்களைச் சேர்ப்பதெனவும், மாநாட்டிற்கு நிதி திரட்டுவதெனவும் முடிவு செய்யப்பட்டது. தோழர் ஜி. கிருஷ்ணமூர்த்தி, எம். எல். ஏ., அவர்களை காரியதரிசியாகக்கொண்ட ஒரு வரவேற்புக் கமிட்டி அமைக்கப்பட்டது. நிதி வசூலுக்காக, தோழர் கே. எஸ். ஷெட்டி அவர்களை காரியதரிசியாகக் கொண்ட ஒரு உப கமிட்டி அமைக்கப்பட்டது.

மாநாட்டுடன் கூடவே, தமிழ் மாகாணம் பூராவிலும் உள்ள கட்சி பிரதிநிதிகளின் பூர்வாங்க மாநாட்டை சென்னையில் கூட்டுவதெனவும், அவ்வமயம் சில தினங்களுக்கு அரசியல் வகுப்புகள் நடத்தவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## இறுதிச்சடங்கு

திருவானைக்காவல் சுயமரியாதைத் தோழர் சுப்பையன் வாழ்க்கைத் துணைவியார் கண்ணம்மாள் இயற்கையெய்தினதைக் குறித்து 10-10-44-ந்தேதி காலை 9 மணிக்கு திருவானைக்காவல் மகிட்டாற்றங்கரை அருகில் உள்ள தோப்பில் ஸ்ரீரங்கம் தோழர் சீனிவாசன் தலைமையில் இறுதிச்சடங்கு நடைபெறும். அதுசமயம் பல தோழர்கள் பேசுவார்கள்.

---

க்கப்பட்டது. ஆனால் அத்தனை பேரும் பார்ப்பனர்களானதால் அதை விடுத்து தங்களுக்குத் தகுந்தபடி அவரவர்கள் பத்திரிகையில் போட்டுக் கொண்டார்கள். பார்ப்பனர்கள் புத்திக்கு இது ஒரு உதாரணம்.—

## பகுத்தறிவுப் புலவர்கள் மாநாடு

தோழர்களே, மேற்படி மாநாடு ஒன்று விரைவில் கூட்டப்போவதால் ஆங்காங்குள்ள புலவர்களும் புலவர் நண்பர்களும், பகுத்தறிவு கொள்கையை கருத்தை வலியுறுத்தக்கூடிய புலவர்கள் பெயரை அருள் கூர்ந்து தெரிவிக்க வேண்டுகிறோம்.

மகாநாட்டில் விவாதிக்கப்பட ஒரு நண்பரால் அனுப்பப்பட்டிருக்கும் விஷயங்கள்:

1. மற்ற எந்தக் கிருமியையும் விட சங்கீதம் அதிக நோயைக் கொடுக்கிறது.
2. எந்தக் கிருமியையும் விட சோதிடம் அதிக நோயைத் தருகிறது.
3. இந்தியாவில் சங்கீதமும் சோதிடமும் சேர்ந்து செய்யும் தீங்கை விட கொடுக்கும் தொல்லையைவிட தத்துவ ஞானமும் கடவுளும் அதிகத் தொல்லையைக் கொடுக்கின்றது.
4. நாட்டிலே உள்ள வேறுவித பைத்தியக்காரர்களைவிட பயங்கரப் பைத்தியக்காரர்களையும், அதிகமான பைத்தியக்காரர்களையும் ஆத்மீகவாதம் (Spiritualism) உண்டுபண்ணுகிறது.
5. தமிழ் வளர்த்தத்தக்க கோபிகளையும் அரைப் பைத்தியங்களையும் (அரைக் "கிராக்கு"களை) உண்டுபண்ணுகிறது.
6. இன்னும் 25 வருடங்களுக்கு இந்தியாவில் ஏன் பிலிம்கள் (படங்கள்) கூடாது?
7. இப்பொழுதுள்ள கல்வி ஸ்தாபனங்களும், பல்கலைக் கழகங்களும், கோவில்களும் இடிக்கப்படவேண்டும் அல்லது எரிக்கப்படவேண்டும்.
8. இளைஞர்கள் மூளைக்கு கரையான்களும், இந்தியாவின் சனியும்.
9. பிராமணர்களுக்கு ஒரே வார்த்தை.
10. இந்தியாவுக்குத் தேவை என்ன?

மேலே கண்ட இவ்விஷயங்களைக் குறித்தும் மற்றும் பல புதிய விஷயங்களைக் குறித்தும் மேற்படி மாநாட்டில் விவாதம் நடக்கும். இதில் கலந்து கொள்ள விரும்பும் பகுத்தறிவுப் புலவர்கள் தங்கள் விருப்பத்தையும் எங்களுக்கு உடனே தெரிவிக்கவும்.

பகுத்தறிவுப் புலவர்கள்
மாநாட்டார், ஈரோடு.

## திருவண்ணாமலை தெ. இ. த. உ. சங்கம்

மேற்படி கழகத்தின் பொதுக் கூட்டம் திருவண்ணாமலை திருவுடல் தெரு ஜவுளி ஆ. க. பொன்னுசாமி முதலியார் கட்டிடத்தில் 12-10-44 மாலை 5 மணிக்கு நடைபெறும். அதுசமயம் சேலம் மாநாட்டுத் தீர்மானத்தை அனுசரித்து சங்கப் பெயரை திராவிட கழகம் என மாற்றும் விஷயமாய் யோசிக்கப்படும். சங்க மெம்பர்கள் யாவரும் இ[illegible]ல் கலந்துகொள்ளக் கோரப்படுகிறது என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

## குடந்தை திராவிடர் கழகம்

கும்பகோணத்தில் திராவிடர் கழகத்திற்குக் கீழ்க்கண்ட இடங்களில் உறுப்பினர்களாக சேரலாம். கும்பகோணம் டவுன் எல்லைக்கு குறைந்தது 2000 (இரண்டாயிரம்) அங்கத்தினராவது சேர வேண்டும். ஆகலால் வயதுவந்த ஆண் பெண் எல்லோரும் திராவிடர் கழகத்தில் உறுப்பினர்களாக சேரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இடங்களின் விவரம்:

1. கே. கே. நீலமேகம், சுருட்டுக்கடை, கடைத்தெரு.
2. தமிழர் கழகம், பேட்டை, கடைத்தெரு.
3. சவுந்திரபாண்டியன் வாசகசாலை, திருமஞ்சன வீதி.
4. பெரியார் வாசகசாலை, கா. வடக்குவீதி.
5. டி. எம். நாயர் வாசகசாலை, ரயில்வேரோடு.
6. திராவிடர் கழகம், தாராசுரம்.
7. கே. நடேசபிள்ளை, ஏஜண்டு, குடிஅரசு, திராவிடநாடு, விடுதலை.
8. எஸ். என். கோவிந்தசாமி, மளிகை, கடைத்தெரு.
9. மேனகா சிலேட் பாக்டரி, ரயில்வேரோடு.
10. ஆர். மாணிக்கம், அழகப்ப முதலியார் தெரு.

கே. கே. நீலமேகம்,
திராவிடர் கழகம், கும்பகோணம்.

## சேலத்தில் பெரியார் பிறந்த நாள்

அரிசிப்பாளையம்: 16-10-44 திங்கள் அன்று பெரியார் அவர்களின் ஆண்டு விழாவும், திராவிடர் கழக முதலாவது ஆண்டு விழாவும் நடைபெறும். அதில் தோழர்கள் சேலம் கல்லூரித் தலைவர் அ. இராமசாமி எம். ஏ., எல். டி., எம். வி. சொக்கலிங்கம், இரா. நெடுஞ்செழியன், பி. ஜனார்த்தனம் மற்றும் பல இயக்கத் தோழர்களும் கலந்து கொள்வார்கள்.

எம். கே. குருசாமி,
செயலாளர்,
திராவிடர் கழகம்.

## பொன்மலை பெரியார் தொண்டர்படை சிதம்பரம் செல்கிறது

மேற்படி தொண்டர் படை 8-10-44 தேதி சிதம்பரத்தில் நடைபெறும் வருணாசிரம மாநாட்டில் சந்திக்க சிதம்பரம் செல்கிறது.

## பெரியார் பிறந்தநாள் விழாவில் முதுபெரும் புலவரின் முழக்கம்

சலகண்டபுரம், செப். 20-

"நான் சைவ சித்தாந்தக் கூட்டங்களிலும் கலந்துகொள்கிறேன். சுயமரியாதைக் கூட்டங்களிலும் கலந்துகொள்கிறேன். இதனால் என்னைச் சிலர் கொள்கையற்றவன், பச்சோந்தி என்றுகூடச் சொன்னார்கள். அது தவறு, எனக்கும் பெரியாருக்கும் கொள்கையில் சில வேறுபாடுகளுண்டுதான். எனினும் பொது மக்களுக்கு அவர்செய்த தொண்டு மிகப் பெரிது. அதனை நான் மதிக்கிறேன், போற்றுகிறேன். யாகத்தின் பெயரால் பசுக்கொலை முதலியவைகளைச் செய்தவர்களை எதிர்க்க புத்தர்பெருமான் தோன்றினார். வேதநூல் கொள்கைகளைப் பரப்பிய சமணரை எதிர்க்க ஞானசம்பந்தர் தோன்றினார். தமிழையும், தமிழரையும், அடிமைப்படுத்திவரும் சுயநலக் கூட்டத்தை எதிர்க்கப் பெரியார் அவதரித்துள்ளார். பெரியார் தோன்றியிராவிடில் நாம் மிகக்கேவல நிலையில் நம்மை வெட்கமில்லாமல் "சூத்திரன்" என்று அழைத்துக்கொள்வதில் பெருமை கொள்ளும் பேதமையில் இருந்திருப்போம்.

"தமிழனின் தன்மானக்குரல், புத்துணர்ச்சி, உள்ளக்கொதிப்பு, முன்னேற்றம் எல்லாவற்றிற்கும் பெரியார்தான் காரணம். பெரியாருக்கு வயது 66 எனக்கு 67. இந்த முறையில் அவர் எனக்கு இளைய சகோதரர்தான். எனினும் அவர் ஆற்றிவரும் அறிவுத்தொண்டினைப் பார்க்கும் பொழுது அவரை எனக்கும் பெரியாரென்றே நான் மதிக்கின்றேன்.

"கடவுளை மறுப்பது என்கொள்கையல்ல. கடவுளின் பெயரால் அக்கிரமங்கள் நடப்பது கண்டுதான் கடவுளை மறுக்கிறார்கள். பாமர மக்கள் விழிப்புற வேண்டும். நான் சுயமரியாதைக்காரன். எனக்குச் சுயமரியாதை வேண்டாமா? ஒவ்வொரு மனிதனுக்கும் சுயமரியாதை வேண்டும்" என்று 18-9-44 மாலை இவ்வூர் திராவிடர் கழகத்தின் சார்பில் சாலியில் மைதானத்தில் நடைபெற்ற பெரியார் பிறந்தநாள் விழாவுக்குத் தலைமைதாங்கிய முதுபெரும் புலவர் ஆசிரியர் அ. வரத நஞ்சைய பிள்ளை அவர்கள் கூறினார்கள்.

கூட்டத்திற்கு ஏராளமான இளைஞர்கள் வந்திருந்தனர். பெரியாரின் உருவப்படம் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது.

வித்துவான் தா. ப. நடராச பிள்ளை, தோழர்கள் சி. ராமநாதன், வ. கண்ணன் முதலியோர் பெரியார் பெருந்தொண்டு பற்றியும், திராவிடக் கழகத்தை வலுப்படுத்தவேண்டுவதைப் பற்றியும் பேசினார்கள்.

தலைவர் முடிவுரையில் "யுத்தம் முடியப்போகிறதென்றும், திராவிடநாடு தனியாக பெற்று தன்மானத்தோடு பழம் பெருமை மிளிர வாழவேண்டுமென்றும், பெரியாரைப் பின்பற்றி நாமெல்லோரும் உழைக்கவேண்டுமென்றும், அவர் இன்னும் நீண்ட நாள் நம்மிடையே வாழ வேண்டுமென்றும்" வாழ்த்தினார்கள்.

கூட்டத்திலேயே திராவிடர் கழகத்திற்கு 45 அங்கத்தினர் சேர்க்கப்பட்டனர். இன்பண்டங்கள் வழங்கப்பட்டு, பெரியார் வாழ்க! திராவிட நாடு திராவிடருக்கே! தமிழ் வாழ்க! என்ற வாழ்த்தொலியுடன் கூட்டம் கலைந்தது.

### மறைவு

ஆத்தூர் வட்டத்தைச் சேர்ந்த பெத்தநாயக்கன் பாளையம் வன்னியகுலப் பெரியார் தோழர் ம. ஆ. பழனிமுத்துக் கவுண்டர் அவர்கள் 24-9-41 ஞாயிற்றுக்கிழமை யன்று தமது 59வது வயதில் காலஞ்சென்றார். இதன் நினைவாக 'குடி அரசு'க்கு ரூ 1 நன்கொடையளிக்கப்பட்டது.

"தமிழ் மகள் தந்த செய்தி
அல்லது
சிறையில் யான் கண்ட கனவு"

என்னும் அழகிய நூலை வாசியுங்கள்.
விலை 0-6-0 அணா.
விற்பனைக்குத் தக்க லாபம் உண்டு
விவரம் வேண்டுவோர் எழுதவும்.

கிடைக்குமிடம்:
கோ. கிருட்டினன்,
133 லாங்குபசார், வேலூர்.
(வ. ஆ)

## கரூர் திராவிடர் மாநாடு

ஷை மாநாடு 24-9-44-ந் தேதி காலை 9 மணிக்கு அம்பிகை டாக்கிஸில் தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ, அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காலை 8 மணிக்கு ரயில் நிலையத்திலிருந்து தலைவர்களை காரில் இறக்கி மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். மாநாடு ஆரம்பமாவதற்கு முன் சில தோழர்கள் பாடினார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள். தோழர் இரா. நெடுஞ்செழியன் பி. ஏ., (ஆனர்ஸ்) திராவிடநாட்டுக் கொடியை ஏற்றிவைத்தார். தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் மாநாட்டைத் திறந்துவைத்தார். வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் எஸ். ஏ. மயில்வாகனன் எல்லோரையும் வரவேற்றார். தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை வகித்து கட்சியின் இன்றைய நிலைமையை விளக்கி நீண்ட சொற்பொழிவாற்றினார். பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் திராவிடநாட்டுப் படத்தைத் திறந்து வைக்கையில் திராவிடநாடு பிரிக்கப்பட வேண்டியதின் அவசியத்தை விளக்கிப் பேசினார். இத்துடன் இடைவேளைக்காக மாநாடு கலைந்தது.

மாநாட்டில் நாகம்மாள், பாரதிதாசன், பெரியார், செல்வம் ஆகியவர்களைக் குறித்து தோழர்கள் சரஸ்வதி-கண்ணப்பன், கெ. அன்பழகன், பி. சண்முக வேலாயுதம், பி. ஜனார்த்தனன் ஆகியவர்கள் பேசினார்கள். பின்னர் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (அவை பின்னர் வெளிவரும்)

மாலை 7 மணிக்கு அமராவதி நதியில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பெரியார் ஈ. வெ. ரா. தோழர்கள் சி. என். அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், கெ. அன்பழகன், பி. ஜனார்த்தனன் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

K. A. Mala's
Selvam Memorial Sports Club,
(Estd: 1941)
No. 91, Monegar Choultry road,
Washermenpet, Madras.
DONATION RECEIPT
THE POOR BOYS' FREE NIGHT SCHOOL FUND
8 Annas 8

| | |
|---|---|
| 1st Prize | Rs. 50. |
| 2nd „ | Rs. 30. |
| 3rd „ | Rs. 20. |

Result on the 1st January 1945 at 6 P.M.
Tickets are available from the above Club.
Help the Poor Boys!

ரோஜா முத்தையா

# பெரியார் பிறந்த நாள்

## நாடெங்கும் கொண்டாட்டம்

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் 66-வது பிறந்தநாள் 17-9-44ந் தேதி முதல் ஒருவாரம் திராவிட நாடெங்கும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது. பல இடங்களில் ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும், விருந்துகளும், சிற்றுண்டி அளித்தலும் நடந்திருக்கின்றன. விவரம் கீழே சுருக்கமாக தரப்படுகிறது.

### நாகப்பட்டணம்

17ந் தேதி காலை பெரியார் படத்தை மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். மாலையில் தோழர் டி. கெ. விஜயராகவலு பி.ஏ.,பி.எல்., தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஆர். வி. கோபல், டி.பி. ஆறுமுகம், என். பி. கிருஷ்ணன், கிறவி ரெத்தினவேலு, கடலூர் பள்ளிமாணவன் வீரமணி முதலியவர்கள் பெரியார் தொண்டு என்பதுபற்றியும் பல விஷயங்களைக் குறித்தும் பேசினர். பெரியார் கொள்கையை ஆதரிப்பதாகவும், திராவிடர் கழகத்தில் அங்கத்தினராக சேரும்படி கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கருங்குளம்

நெல்லை ஜில்லா மேலப்பாளையம் கிராமம் கருங்குளம் தேவேந்திர வேளாள இளைஞர் கழகத்தாரால் மிகச் சிறப்பாக பெரியார் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

### கரூர்

திராவிடர் கழக ஆதரவில் தோழர் கே. வேலாயுதம் தலைமையில் பெரியார் ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் குமாரவேல், புலிகேசி, இராவணன் ஆகியோர் பெரியார் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

### திருகனூர்

இவ்வூர் திராவிட இளைஞர் கழகத்தின் சார்பாக பெரியார் பிறந்த நாள் 17-9-44-ந் தேதி ஷை கழகத் தலைவர் தோழர் கா. ரா. ரெங்கசாமி ரெட்டியார் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர் ராஜமாணிக்கம், பெரியார் சேவையை விளக்கிப் பேசினார்.

### திருச்செங்கோடு

ஷை ஊர் திராவிடர் கழகத்தின் சார்பில் ஷை கொண்டாட்டம் புள்ளிக்கார் மில்ஸ் தோழர் ஆர். வி. பொன்னுசாமி அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் எஸ். கெ. வரதராஜுலு, கே. பரமசிவம், மஜீத்கான் பி. ஏ., எல். டி., டி. பெரியதம்பி, உயிர்மணி முதலியவர்கள் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

### அருப்புக்கோட்டை

பெரிய கடைவீதியில், தோழர் அ. ராம. சுந்தர பாண்டியன் கிட்டங்கியில் சோஷியல் பெடரேஷன் அங்கத்தினர்கள் சார்பில் தோழர் ப. உ. பழனிச்சாமி பெரியாரைப் பாராட்டிப் பேசினார்.

### சின்ன சேலம்

கடலூர் தோழர் மா. பீட்டர் பி. ஏ., தலைமையில் விருத்தாசலம் தோழர் முனுசாமி அவர்களால் கொடுக்கப்பட்ட பெரியார் படம் அலங்கரிக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. வழியில் ஆங்காங்கு தோழர் பீட்டரால் பெரியார் அவர்கள் சேவையைப் பாராட்டிப் பேசப்பட்டது. மாலையில் தோழர் பீட்டர் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் கலாமணி, கடலூர் சொமராசாமி, எத்தாப்பூர் ஒய். எஸ். அருணாசலம் முதலியவர்கள் பேசினார்கள்.

### வாடிப்பட்டி

இவ்வூர் உண்மை விளக்க சங்கத்தாரால் 17-உ பெரியார் புகைப் படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. மாலையில் தோழர் கோபால்சாமி தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர்கள் பால்சாமி, ஜெயசிங், செங்கணன் முதலியவர்கள் பேசினார்கள்.

### திருச்சி பீமநகர்

18-9-44-ஆம் தேதி தேதி அன்புதாஸ் தலைமையில் ஷை விழா பீமநகர் திராவிட இளைஞர் கழகத்தாரால் கொண்டாடப்பட்டது. தோழர்கள் டி. ஏ. மாணிக்கவாசகம், டி. கெ. சீனிவாசன், ஏ. கெ. பாஷா ஆகியோர் பெரியார் பெருந் தொண்டைப் பற்றி விளக்கிப் பேசினர்.

### கோனாம்பட்டு

இவ்வூர் திராவிடர் கழகத் தலைவர் தலைமையில் பெரியார் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. பல தோழர்கள் பெரியாரை வாழ்த்திப் பேசினர்.

### புரசங்காடு

பாபநாசம் (தஞ்சை) தாலுகா புரசங்காடு கிராமத்தில் தோழர் வி. வீராசாமி பி.-ஏ., தலைமையில் ஷை விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தோழர்கள் அஜீஸ், வெற்பரசு, இளம்பூரணர், இராவணன் முதலியோர் பெரியார் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்த சேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.

### திருவையாறு

ஷை ஊர் திராவிடர் கழகத்தின் சார்பாக பெரியார் பிறந்த நாள் அரசர் கல்லூரி மாணவர் தோழர் ஆ. மகிழ்நன் தலைமையில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மாணவர்கள் ஆறுமுகம், நாதமுனி, நரசிம்மம், பிரபாகரன், முருகையன் முதலியவர்கள் பெரியாரின் தொண்டு என்பது பற்றி பேசினார்கள்.

### தூத்துக்குடி

மேலச்சண்முகபுரம் சர் ஏ. டி. பி. சங்கத்திலிருந்து தோழர் கே. நாகமுத்து தலைமையில் பெரியார் படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. ஐண்டில் வாலிபர் சங்கத்தின் பக்கத்திலுள்ள மைதானத்தில் பரமக்குறிச்சி தோழர் த. சு. முத்தையா பெருமாள் தலைமையில், பெரியார் விழா கொண்டாடப்பட்டது. பல தோழர்கள் பேசிய பின் நகர் தெ. இ. ந. உ. சங்கம் என்ற பெயரை திராவிடர் கழகம் என்று மாற்றி கழகத்திற்கு முக்கியஸ்தர்களும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

• •

இந்நகர் திராவிடர் கழக உபதலைவர் தோழர் டி. தங்கையா ஆரோன் மாமனார் தூத்துக்குடி மேலச்சண்முகபுரம் தோழர் பே. வ. செல்லையா நாடார் பெரியார் பிறந்த விழாவை முன்னிட்டு சுமார் 15 ரூபாய்க்கு தின்பண்டங்கள் ஷையாரின் தேங்காய் கடையில் வைத்து அன்னாரது தகப்பனார் காலஞ்சென்ற வே. வன்னியப் பெருமாள் நாடார் ஞாபகார்த்த வாசகசாலையின் சார்பாக வினியோகம் செய்தார். இவ்விழாவை முன்னிட்டு 'குடி அரசு'க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

### செங்கம்

செங்கம் தாலுகா திராவிடர் கழகத்தின் ஆதரவில் 24-9-44ந் தேதி தோழர் ஆர். வெங்கிடாசலம் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில், பெரியார் பெருந்தொண்டு என்பதுபற்றி தோழர்கள் ஜி. முத்துசாமி, டேனியல் ஆகியவர்கள் பேசினார்கள். தோழர் எஸ். சி. சுப்பிரமணியம் யுத்த நிலை என்பதுபற்றி பேசினார். சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரித்தும், தோழர் பி. பால சுப்பிரமணியன் குழுவினர் போக்கைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

### மணக்கால்

திருச்சி மாவட்டம் லால்குடி தாலுகா மணக்கால் கிராமம் திராவிடர் கழக சார்பில் தோழர் எல். எஸ். ஆறுமுகம் அவர்கள் தலைமையில் 19-9-44ந் தேதி பெரியார் நாள் கொண்டாடப்பட்டது. தோழர்கள் நம்மாழ்வார், சீனிவாசன் முதலியவர்கள் பேசினார்கள். மணக்கால் கிராம திராவிடர் கழக உபதலைவர் ம. கி. சோமசுந்தரம் அவர்கள் தாயார் இயற்கையெய்தியதற்கு வருந்தியும், சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ரோஜா முத்தையா

### வேலூர் (சேலம்)

21-9-44ந் தேதி தோழர் வை. பொன்னம்பலனார் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பெரியார் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. தோழர்கள் இரா. நாவலடி, ஆ. சே. குமாரவேலு, வி. சண்முகம், சரசுவதி கண்ணப்பர் முதலியோர் நாட்டுப் பிரிவினை, திருமதமும் திராவிட நாடும், திராவிடநாடு திராவிடருக்கே, திராவிடம் என்பவை பற்றி முறையே சொற்பொழிவாற்றினார்கள்.

### உரிகம்

பழந்தமிழர் இளைஞர் கழகத்தார் 24-9-44-ஆந் தேதி பெரியார் பிறந்த நாளை பல சுயநல எதிர்ப்பாளர்களுக்கிடையே வெற்றிகரமாகக் கொண்டாடினார்கள். தோழர் சங்கரசாமி தலைமையில், தோழர் ஜார்ஜ் வில்லியம்ஸ் பெரியார் படத்தைத் திறந்து வைத்தார். தோழர்கள் எம். முனிசாமி, எம். மதலைமுத்து, கெ. என். ராஜு கோபால், ஆர். சுப்ரமணியம், பி. என். வீராசாமி முதலியவர்கள் பெரியாரும் சமுதாயமும் என்பது பற்றி பேசினார்கள்.

### நாமகிரிப்பேட்டை

இராசிபுரம்தாலுகா நாமகிரிப்பேட்டையில் பெரியார் பிறந்த நாள் 20-9-44-ஆந் தேதி பெருங்குறிச்சி மிட்டாதார் தோழர் சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு, அன்று திராவிடர் கழகமும் திறுவப்பட்டது. தோழர்கள் சி. பி. சின்னராசு, பாவலர் பாலசுந்தரம் முதலியவர்கள் பேசினார்கள்.

### தாராபுரம்

17-9-44ஆந் தேதி மாலை பெரியாரின் படத்தை அலங்கரித்து மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். 7 மணிக்கு தோழர் ஆர். எஸ். பி. ராமய்யா அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் கே. சே. சீலமேகம், பாவலர் பாலசுந்தரம் முதலிய தோழர்கள் பேசினார்கள்.

### திருவண்ணாமலை

திருவண்ணாமலை பத்தளாங்குளத் தெருவில் திராவிட கழகத்தின் ஆதரவில் 17-9-44-ந் தேதி பெரியார் நாள் கொண்டாடப்பட்டது. பெரியார் படம் மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. பெரியார் சேவையைப் பற்றி தோழர் பெருமாள் முதலியவர்கள் பேசினார்கள். தோழர் என். சுந்தரம் பெரியாரைப் பற்றிப் பாடினார்.

### அருப்புக்கோட்டை

தியாகராய வாலிபர் சங்க முன்பாக தோழர் செ. ஆ. சொக்கலிங்க பாண்டியனார் அவர்கள் தலைமையில் பெரியார் அவர்கள் நாள் கொண்டாடப்பட்டது. தோழர்கள் டி. கெ. சுப்பிரமணியம், என். எஸ். பழனிச்சாமி, சே. கந்தசாமி ஆகியோர்கள் பேசினார்கள். தோழர் சிவ. சண்முகசுந்தரனார் நன்றி கூறினார்.

### ஈரோடு

மருத்துவகுல சங்கத்தாரால் 17-9-44 ஆந் தேதி தோழர் எஸ். அப்பாவு தலைமையில் பெரியார் ஆண்டு விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காரியதரிசி தோழர் வி. பி. ராமசாமியால் வந்தனம் கூறப்பட்டது.

### பூந்தோட்டம்

திராவிட இளைஞர் கழகத்தின் ஆதரவில் 17-9-44ந் தேதி மாலை பெரியார் படம் மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. பின் தோழர் இ. நெடுஞ்செழியன் (புலவர் 2-ம் ஆண்டு மாணவர்) தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் வெள்ளியக்குடி முருகேசனும் மற்றும் பல தோழர்களும் பெரியாரும் பெருந்தொண்டும் என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்கள்.

### ஓடாக்கநல்லூர்

திராவிடர் கழகத்தின் சார்பில் 17-9-44ந் தேதி போர்டுஸ்கூல் தலைமை ஆசிரியர் தோழர் எஸ். தண்டபாணி செட்டியார் அவர்கள் தலைமையில், பெரியார் பிறந்தநாள் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. தோழர்கள் கருணாநந்தம், நாராயணசாமி, முருகேசன், முதலியவர்கள் பேசினார்கள்.

### கடலூர் (ஓ. டி.)

16-9-44ல் கடலூர் பழையபட்டினம் செட்டி கோவிலுக் கெதிரில் தோழர் மா. பீட்டர் பி. ஏ, அவர்கள் தலைமையில், நடந்த பொதுக் கூட்டத்தில் பெரியார் அவர்கள் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. கடலூர் இளவழகன், வீரமணி, சென்னை சிவரத்தினம், பட்டுக்கோட்டை நெடுஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்) ஆகியோர் பேசினர்.

* *

17-9-44-ந் தேதி தோழர் நெடுஞ்செழியன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் வி. கே. எஸ். சண்முகசுந்தரம் தலைவராகவும், வி. சிதம்பரநாதன் செயலாளராகவும் கொண்ட திராவிடர் கழகம் திறவப்பட்டது.

* *

17-9-44-ஆந் தேதி மஞ்சக்குப்பம் மைதானத்தில் சென்னை சிவரத்தினம் தலைமையில் பெரியார் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், பி. ஜனார்த்தனம், கடலூர் இளவழகன், அழகரசன் ஆகியோர் பேசினார்கள்.

### திருப்பத்தூர் (R. D.)

இந்நகர் திராவிடர் கழக சார்பாகத், தெம்மாப்பட்டு செந்தமிழ்ப் பொது நிலைப்பள்ளியில் தோழர் முத்துச்சாமி வல்லத்தரசு அவர்கள் தலைமையில் "பெரியார் பிறந்த நாள்" சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பெரியார் படத்தை சிங்கம்புணரித் தோழர் சீனி அவர்கள் பெரியார் படத்தைத் திறந்து வைத்தார். வேந்தம்பட்டி வித்துவான் சுந்தரம் அவர்கள் 'பெரியாரும் திராவிடரும்' எனும் பொருள் பற்றி பேசினார். ஆசிரியர் முருகையா வந்தனோபசாரம் கூறினார்.

### நிரவி

காரைக்காலைச் சேர்ந்த நிரவி நடுத்தெரு, பிள்ளையார் கோவிலுக்கு எதிரில் 17-9-44-ஆந் தேதி தோழர் முத்து வைத்தியலிங்கம் தலைமையில் பெரியார் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. தோழர் தி. கனக சபாபதி, பெரியார் படத்தைத் திறந்துவைத்தார். தோழர்கள் நாராயணசாமி, சின்னையன் முதலியோர் பெரியார் பெருந்தொண்டு பற்றி விளக்கிப் பேசினார்கள்.

### நாமக்கல்

திராவிடர் கழக ஆதரவில், கணேசபுரம் சங்கக் கட்டிடத்தில் வழக்கறிஞர் தோழர் பி. முத்துசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் 17-9-44-ஆந் தேதி பெரியார் பிறந்த நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திராவிடர் கழகம், சுயமரியாதைச் சங்கம், தெ. இ. ந. உ. சங்கம் என்றன்னவைகளை ஒன்றாகச் சேர்த்து திராவிடர் கழகம் என்று பெயரிடுவதென்றும், தோழர் பாலசுப்பிரமணியம் குழுவினர் போக்கைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கட்டிப்பாளையம்

17-9-44ந்தேதி தோழர் க. கருப்பண்ணன் தலைமையில், பெரியார் நாள் கொண்டாடப்பட்டது. தோழர் ஆ. கணபதி பெரியார் சேவையை விளக்கியும் திராவிடநாடு பிரிவினையின் அவசியத்தைப்பற்றியும் விளக்கிப்பேசினார்.

### கண்டியூர்

19-9-44ந் தேதி தோழர் வி. டி. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் ஆர். சுப்பிரமணியம் செட்டியார், ந. கந்தசாமி முதலியவர்கள் பெரியாரும் தமிழர் நிலையும், திராவிடநாட்டுப் பிரிவினையின் அவசியம் என்பதுபற்றியும் பேசினார்கள்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தோழர்கள் டி. சோமசுந்தரம்பிள்ளை அவர்களை தலைவராகவும், எஸ். கோதண்டராமன் அவர்களை செயலாளராகவும், கொண்ட ஒரு திராவிடர் கழகம் நிறுவப்பட்டது. சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரித்தும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### தஞ்சாவூர்

திராவிட வாலிபர் கழகத்தின் ஆதரவின் 16-9-44-ஆம் தேதி பெரியார் படம் அலங்கரிக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. மாலை 7 மணிக்கு தோழர் கோ. சி. பெரியசாமி புலவர் அவர்கள் தலைமையில் திருச்சி தோழர்கள் டி. கே. சீனிவாசன், வ. கே. பாஷா, கே. பாங்குசம், குடந்தை எஸ். கருணானந்தம், காவை காளியப்பன் முதலியவர்கள் பெரியார் பெருந்தொண்டைப் பற்றி பேசினார்கள்.

### திண்டிவனம்

20-9-44-ந் தேதி இங்கர் மூன்று இராந்தல் செக்கில் புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் தலைமையில் பெரியார் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் இளவழகன், வீரமணி, ஜீவரத்தினம் (தொழிற்சட்சித் தலைவர் சென்னை) இவர்கள் விரிவுரை நிகழ்த்தினார்கள். புலவர் வீரஅரங்கனார் நன்றியுரை கூறினார். சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரித்தும் பெரியார் அவர்களே தலைவர் என்பதை ஷை கழகம் ஆதரிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

### அவலூர்பேட்டை

இவ்வூர் பகுத்தறிவாளர் கழகத்தின் வாராந்திரக் கூட்டத்தில் 17-9-44ந்தேதி ஆசிரியர் ரங்கசாமி அவர்கள் தலைமையில் பெரியார் பிறந்தநாள் விழா வெற்றியுடன் கொண்டாடப்பட்டது. சேலம் மாநாட்டுத்தீர்மானங்களை ஆதரித்தும், [illegible] பித்தர்கள் செய்யும் சூழ்ச்சிகளைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதன் நினைவாக 'குடி அரசு', 'திராவிடநாடு' ஆகியவைகளுக்கும் ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

### கோவை

கோவை பெரியார் ஈ. வெ. ரா. வாலிபர் சங்கத்தில் 17-9-44-ஆம் தேதி தோழர் வெள்ளிங்கிரி அவர்கள் தலைமையில் பெரியார் பிறந்த நாள் என்பது பற்றித் தோழர் எல். எஸ். காசிம் பேசினார். சேலம் மாநாட்டுத் தீர்மானங்கள் ஆதரிக்கப்பட்டன.

---

### பிறப்பு

திருவாரூர்: சுயமரியாதை திருமணம் செய்து கொண்ட தோழர் வி. ஜி. ரெங்க[illegible] அவர்கள் வாழ்க்கை துணைவிக்கு [illegible]-9-44-ல் ஆண் குழந்தை பிறந்தது, [illegible] [illegible] [illegible].

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

5 ரூபாய் சம்பளத்தில் வேலையாள் வைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

*　　　*

நாமகிரிப்பேட்டை: 20-9-44-ல் தோழர் ஏ. அய்யாவு அவர்கள் தலைமையில் கூடிய கழக அங்கத்தினர்கள் கூட்டத்தில் தோழர் செ. முத்துகிருஷ்ணன் அவர்கள் தலைவராகவும், தோழர் டி. ஏ. பெத்தி அவர்கள் உபதலைவராகவும், தோழர்கள் எம். கே. அங்கமுத்து, எஸ். அலாவுதீன் அவர்கள் செயலாளராகவும், தோழர்கள் கே. முனிசாமி, ஏ. பெத்தண்ணன், ஏ. சிக்கிரியர், டி. பழனிசாமி, ஜி. சீனிவாசன் ஆகியவர்கள் அங்கத்தினர்களாகவும் 9 பேர்கள் அடங்கிய கமிட்டி அமைக்கப்பட்டது.

*　　　*

திண்டிவனம்: இவ்வூர் திராவிடர் கழக செயற்குழுவினர் கூட்டம் 19-8-44-ந் தேதி கூடிற்று. அதுசமயம் சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

*　　　*

புவனகிரி: 22-9-44ல் திராவிடர் கழக அங்கத்தினர்களின் கூட்டம் கழகத் தலைவர் தோழர் கெ. நமசிவாயம் அவர்கள் தலைமையில் கூடியது. அவ்வமயம் சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை முழு மனதோடு ஆதரிப்பதாகவும், மாநாட்டில் பெரியாரைப் புகழ்ந்துவிட்டு வெளியில் போய் குறைகூறித் திரியும் பேயர் கூட்டமாகிய பி. பா. கூட்டத்தை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் காலூரு அங்கத்தினர் சேர்க்கும் டிக்கட்டுகளை தலைமை காரியால நிலையத்திலிருந்து வரவழைத்து அங்கத்தினர்கள் சேர்ப்பதற்கு ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. பெரியார் பிறந்ததின விழா அங்கத்தினர்களால் விமரிசையாகக் கொண்டாடப்பட்டதுடன் பெரியார் அவர்களுக்கு ஒரு பாராட்டுத் தந்தியும் கொடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டதுடன் கூட்டம் இனிது கலைந்தது.

## அறிக்கை

சென்னை, செங்கற்பட்டு, வடஆற்காடு மாவட்ட திராவிடர் (ஜஸ்டிஸ்) கழகங்களின் ரீஜினல் லீடர் தோழர் டி. சண்முகம் அவர்கள் கீழ்க்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார்:

சேலம் மாநாட்டுத் தீர்மானப்படி, சென்னை நகரில் இன்றுவரை 600 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். அக்டோபர் மாத முடிவுக்குள் குறைந்தது 3,000 உறுப்பினர்களையாவது சென்னை நகரில் மட்டும் சேர்க்கப்படுமென்று நம்புகிறேன்.

சென்னை நகரின் ஒவ்வொரு வட்டங்களிலுமுள்ள திராவிடர் இயக்கத் (ஜஸ்டிஸ் கட்சி) தோழர்கள் இன்றே சென்னை நகர திராவிடர் கழகக் காரியதரிசியிடமிருந்து இரசீது புத்தகங்களைப் பெற்று, பெருவாரியான உறுப்பினர்களைச் சேர்த்து கழகங்கள் அமைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

செங்கற்பட்டு,வடஆற்காடு மாவட்டங்களிலும், உறுப்பினர்களைச் சேர்த்து, தாலுகா—ஜில்லா கழகங்களை அமைக்க, சில முக்கிய இடங்களுக்கு யான் நேரில் வந்து ஆங்காங்குள்ள பிரமுகர்களின் உதவியால் ஆவன செய்ய முடிவு செய்திருப்பதால், மேற்படி இரு மாவட்டங்களிலுமுள்ள இயக்கத் தோழர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு ஆயிரக்கணக்கில் உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டுகிறேன்.　　டி. ஷண்முகம்.

---

## சிதம்பரம் திராவிடர் கழகம்

சிதம்பரம்: 11-9-44-ந் தேதி தோழர் டி. பத்மநாபன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கழக செயற்குழுவினர் கூட்டத்தில், அண்மையில் பெரியார் நாளைக் கொண்டாடுவதென்றும், அன்று திராவிடர் படிப்பகம் திறப்பு விழா ஆற்றுவதென்றும், சிதம்பரத்தில் 7-10-44-ல் இருந்து 5 நாள் நடைபெறவிருக்கும் அகில இந்திய வர்ணாசிரம மாநாட்டிற்கு திராவிடரின் மாறுபட்ட கருத்தை அறிவிப்பதற்காக தளபதி அண்ணாதுரை அவர்களையும் தோழர் சிற்றரசையும் கொண்டு பொதுக் கூட்டம் நடத்துவதென்றும் சேலத்தில் முறைப்படி நடைபெற்ற மகாண மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரிப்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

பம்பாய்: நான்குநேரி தாலுகா ஆ. தி. மகாஜன சங்கத்தின் 2-வது மாதாந்திரப் பொதுக் கூட்டம் 10-9-44-ல் தோழர் பி. சி. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் வி. எஸ். டி. ராஜா பேசினார்.

## சென்னையில் பெரியார் தினத்தில் புதிய திராவிட கழகம்

### தோழர் எம். சத்தியவாணி அம்மை பேச்சு

17-9-44 ஞாயிறு மாலை 7-மணிக்கு சென்னை திருவல்லிக்கேணி ஜார்ஜ் நகரில் பெரியார் பிறந்தநாள் விழா கொண்டாட ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அதுபோது திராவிட கழகம் ஒன்று நிறுவப்பட்டது. தோழர் எம் எஸ். முத்து அவர்கள் தலைமை வகித்து நீண்டநேரம் பேசியபின் தோழர் எம். சத்தியவாணி அம்மையார் பேசியதின் சுருக்கம்:

"தாய்மார்களே! தோழர்களே!

பெரியாரின் பிறந்தநாள் விழாவின் போது இக்கழகம் ஆரம்பிப்பது பெரியார் சேவைக்கு துணைபுரிவதாகும். பட்டம் பதவி விடவேண்டும் என்றவுடன் பார்த்தீர்களா போலி தலைவர்களின் ஆர்ப்பாட்டத்தை. சேலம் மாநாட்டிற்கு நானும் சென்றிருந்தேன், வாலிபர்களின் உணர்ச்சி ததும்பிய ஆரவாரத்தையும், உள்ளக்கிளர்ச்சியையும் ரத்தக்கொதிப்பையும் கண்டு வியப்புற்றேன். பெண்களும் பலபேர் கூடியிருந்தது எதிர்கால வெற்றியை குறிப்பதாகும். ஆனால் சென்னை திரும்பிவந்தபோது இங்குள்ளவர்களின் உறக்கத்தையும் பொறுப்பற்றவர்களின் அறிக்கைகளையும் கண்டு விசனித்தேன். / முற்காலத்தில் திராவிடர்கள் எல்லாவித நாகரீகத்திலும், கலைகளிலும் கடல்கடந்த வியாபாரத்திலும் தேர்ச்சி பெற்றிருந்தனர். திராவிடர்கள் பொற்குடங்களில் சந்தன எண்ணெயை எடுத்துக்கொண்டு அயல் நாடுகளுக்குச் சென்று வியாபாரம் செய்தார்களென்று சேஷய்யங்கார் என்னும் ஓர் ஆரிய ஆசிரியராலேயே "திராவிட இந்தியா" 'Dravidian India" என்னும் ஆங்கில நூலில் வரைந்துள்ளார். அதுமாத்திரமல்ல காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் உலக சரித்திரம் "Glimpses of World History" என்னும் ஆங்கில நூலில் அக்காலத்தில் இந்தியாவில் வசித்தவர்கள் திராவிடர்களென்றும் அவர்கள் வசித்து, மெசபெடோமியா முதலிய மேலை நாட்டுகளுக்கு கப்பலில் சென்று வியாபாரம் செய்தார்களென்றும் அவர்களின் சந்ததியார்களே தென்னாட்டில் சென்னையை சூழ்ந்துள்ள இடங்களில் வசிப்பவர்களென்றும் கூறியுள்ளார். "There was trade and ships carried Indian Goods to Egypt and Mesapotamia and other countries. In those days the people who lived in India were called Dravidians. They are the people whose descendants live in South India now round about Madras."

திராவிடர்களை எவ்வளவு இழிந்து கூறவேண்டுமோ அவ்வளவையும் இராமாயணம் போன்ற புத்தகங்களில் காணலாம். இவ்விழிவை போக்க ஈ. வெ. ரா. போன்றவர்கள் எடுத்துக் கூறினால் படித்த பண்டிதர்கள் பதட்டம் கொள்ளுகின்றனர். ஆனால் காங்கரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு கூறினால் பதில் சொல்லாமல் பதுங்கிக் கிடக்கின்றனர். இராமாயணத்தைப் பற்றி பண்டித ஜவஹர்லால் கூறுவது: "இராமாயணத்தில் இராமனுக்கு தென்னாட்டிலுள்ள குரங்குகள் உதவி செய்தனவென்றும் அந்த குரங்குகளுக்கு மாவீரன் அநுமான் என்றும் தரப்பட்டிருக்கிறது. இராமாயணம் ஆரியர்களுக்கும், தென்னாட்டிலுள்ள மக்களுக்கும் நடந்த போராட்டத்தின் கதை என்றும் இவர்களின் தலைவன் இராவணன் என்றும் புலனாகிறது. குரங்குகள் என்று சொல்லப்பட்டவர் தென்னாட்டிலுள்ள கருப்பாயுள்ள திராவிடர்களே."

'In the Ramayana we are told that Rama was helped by the monkeys in South India and Hanuman was the great hero of the monkeys. It may be that the story of the Ramayana is really a story of the fights of the Aryans against the people of south whose leader was Ravana proba-bly the monkeys were the dark people lived in Southern India"

திராவிடர்களாகிய நாம் இன்று கடும் பசியால் வாடி வதைகிறோம். இப்பசியை உடனே தணிக்காவிடில் நசிந்துவிடுவோம் என்ற இரக்கத்தினால் ஒரு செடியை நட்டார் கனிகளை தந்து பசியைப் போக்க ஒரு வீரர். செடி மரமாகி, மரம் பூ பூத்து, பூ காயாகி பின் காய் கனியாக அதிக நாள் செல்லுமே என்று பயந்து சீக்கிரமே வளர்ச்சி தரத்தக்க ரசாயன முறைப்படி தயாரித்த எருவைப் போட நிர்மாணித்தார். (Chemical Manure) இவர் போட்ட செடியானது மற்றவர்கள் போட்ட செடி போல் ஒரு சிலருக்கு கனி தந்து பட்டுவிடுவதல்ல; நிரந்தரமாக எல்லா மக்களுக்கும் பசியை தவிர்க்கவேண்டுமென்பது தான் அவர் கருத்து. /

கருணை என்று நினைத்து ஒருவர் பிச்சைக்காரர்களுக்கு ஒருநாள் அன்னதானம் வழங்கிவிடுவதாலேயே அவர்கள் பசியை என்றும் தணித்துவிட்டதாக அர்த்தமா? மறுநாளிலிருந்து அவர்களின் கதி என்ன? இதுதான் அந்த வீரரின் வினா? இதை யாராவது தப்பென்றோ அல்லது வேண்டாமென்றோ கூற முடியுமா? அந்த வீரர்தான் நமது பெரியார். அவர் போட்ட செடிதான் திராவிட கழகம் நிறுவியது. சீக்கிரம் வளரத்தக்க ரசாயன எருக்கள் தான் அன்று சேலம் மாநாட்டில் நிறைவேறிய தீவிர தீர்மானங்கள். கனி தான் நாம் கட்டாயம் அடையக்கூடிய திராவிடநாடு. பசி தீர நாம் போடும் இக்கூக்குரல். ஆகவே அதற்கு உறுதுணையாக இக்கழகம் அமையுமென்று ஆசையுடன் என் உரையை" முடிக்கிறேன் என்று பேசினார்கள்.

பிறகு தோழர் ஜி. கோபால் அவர்கள் பேசினார். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.


## "குடி அரசு" பதிப்பக வெளியீடுகள்

### 2 அணா புத்தகங்கள்

இனிவரும் உலகம்
ஈ. வெ. ரா. சீர்திருத்த மகாநாட்டு உபந்யாசம்
பெரியார் திருச்சி பிரசங்கம்
இராமலிங்க சுவாமிகள் பாடல்திரட்டு
நரகம் எங்கே?
ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்
இங்கர்சாலின் ஜீவிய சரித்திரம்
மதம் என்றால் என்ன?
இந்தி எதிர்ப்புப் பாடல்கள்
கார்ல்மார்க்ஸ்
சோஷியலிசம்
அகத்தியர் ஆராய்ச்சி
சமதர்ம உபந்யாசம்
பஞ்சமா பாதகங்கள் (அய்யாமுத்து)
தமிழ்நாடு தமிழருக்கே
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

| | |
|---|---|
| தமிழர் தலைவர் | 1—0—0 |
| பாரதிதாஸன் கவிதைகள் | 1–8–0 |
| அறிவின் எல்லை (பெரியாரின் எழுத்தும் பேச்சும் என்ற பத்து புத்தகங்கள் கொண்ட பயிண்டு வால்யூம் | 1–4–0 |
| திராவிடர் ஆரியர் உண்மை | 0 0 6 |
| இந்திப்புரட்டு | 0 0 6 |
| தமிழ் இசை நடிப்பு கலைகள் | 0–1–0 |
| காந்தி கண்டனக் கீதம் | 0–1–0 |
| சமதர்மக் கீதங்கள் | 0–0–6 |

கிடைக்குமிடம்:—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.


Edited Printed and Published by N Karivaradasamy at the Tamil Ian Press, 12, ... Street Erode.